# இலங்கை



இலங்கை செயற்றிறனுடைய பல் கட்சி முறைமை கொண்ட ஒரு குடியரசு நாடு. மக்களின் விருப்பத்துக்கமையத் தெரிவுசெய்யப்பட்டு ஓர் இரண்டாவது 6 ஆண்டு காலப் பகுதிக்காக 1999ஆம் ஆண்டில் மீண்டும் ஆணை வழங்கப்பட்ட ஜானாதிபதியும், 2004ம் ஆண்டில் ஓர் 6 ஆண்டு பதவிக் காலத்திற்கெனத் தெரிவுசெய்யப்பட்ட 225 உறுப்பினர் பாராளுமன்றமும் அரசியலமைப்பு அதிகாரத்தைப் பகிர்ந்து கொண்டுள்ளனர். 1983 முதல் 2001ம் ஆண்டு வரை அரசாங்கம் நாட்டின் வடக்கையும் கிழக்கையும் உள்ளடக்கியதாக இன அடிப்படையில் தனியானதொரு தமிழ்நாடுகோரி வரும் ஒரு பயங்கரவாத இயக்கமான தமிழ் ஈழ விடுதலைப்புலிகள் இயக்கத்துடன் (எல்ரிரிஈ) போரிட்டு வந்தது. 2001 டிசம்பரில் அரசாங்கமும் எல்ரிரிஈயும் தனித்தனியாக ஒரு தலைப்பட்சமான போர்நிறுத்தத்தை அறிவித்தன. பின்னர் 2002 பெப்ரவரியில் ஒரு முறையான போர் நிறுத்த ஒப்பந்தத்தில் கைசாத்திட்டன. நோர்வே அரசாங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட பேச்சுக்களில் ஆறு தடவைகள் கலந்து கொண்ட பின்னர் எல்ரிரிஈ 2003 ஏப்ரிலில் பேச்சுவார்த்தைகளை இடைநிறுத்திக்கொண்டது. இவ்வாண்டில் இரு தரப்பினரும் 2002 தடவை உடன்படிக்கைளை மீறியுள்ளனர். எல்ரிரியினரின் மீறல்கள் கூடுதலாகவும் மோசமானதாகவும் இருந்தன. நீதித்துறை சுதந்திரமானது. ஆனால் சில என்ஜிஓ கள் உயர் தர நீதித்துறை உறுப்பினர் அரசியல் அழுத்தங்களுக்குப் பணிவதாகவும் கீழ் மட்டங்களில் ஊழல் ஒரு பிரச்சினையாக இருப்பதாகவும் தெரிவித்தன. நீதித்துறைச் செயற்பாட்டை வழக்கு விசாரணைத் தாமதங்களும் பயிற்சி மற்றும் வளங்கள் பற்றாக்குறையும் சிக்கலாக்குகின்றன.

உள்நாட்டு பாதுகாப்பு அமைச்சு 66.000 உறுப்பினர் கொண்ட பொலீஸ் படையை நெறிப்படுத்துகிறது. இப்படை நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் உள்நாட்டுப் பாதுகாப்புக்குப் பொறுப்பாக இருக்கிறது. பாதுகாப்பு அமைச்சு 112,000 பேர் கொண்ட இராணுவத்தையும் 27,000 பேர் கொண்ட கடற்படையையும் 20,000 பேர் கொண்ட விமானப்படையையும் கட்டுப்படுத்துகிறது. 20,000 பேர் கொண்ட ஆயுதம் தரித்த ஊர்காவலர் எல்ரிரிஈ கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு அருகேயுள்ள முஸ்லிம்களுக்கும் சிங்களவர்களுக்கும் பாதுகாப்பு வழங்குகிறார்கள். அவரகள் உள்ளுர் சமூகங்களிலிருந்து அணி திரட்டப்பட்டவர்களாவர். சிவில் அதிகாரத்தினர் பாதுகாப்பு படையினரை நன்கு கட்டுப்படுத்தி வைத்துள்ளனர். பாதுகாப்பு படையில் சிலர் மோசமான மனித உரிமை துஷ்பிரயோகங்களைச் செய்துள்ளனர்.

இலங்கை ஒரு சந்தைப் பொருளாதாரத்தில், உற்பத்திகள, சேவைகள் துறைகளில் தங்கியுள்ள ஒரு நாடாகும். மக்கள்தொகை 2003ல் ஏறத்தாழ 19.4 மில்லியன்களாகும். உண்மையான உள்ஊர் உற்பத்தி(ஜி.டி.பி) வளர்ச்சி 2003ல் 5.9 சதவீதமாகும். அரச துறை சம்பளங்களும் நலன்களும் பணவீக்கத்துக்கு ஈடாக இருந்தன. 26 டிசம்பரில் பாரிய சுனாமி அனர்த்தம் தெற்கு வடக்கு கிழக்கு மாகாண கரையோரப்பகுதிகளை கணிசமான அளவு அழித்து அயிரக்கணக்கானோரைக் கொன்று, காயப்படுத்தி, இடம்பெயர வைத்தது.

அரசாங்கம், பொதுவாக அதன் பிரஜைகளின் மனித உரிமைகளை மதித்துவரினும், சில துறைகளில் பாரதூரமான பிரச்சினைகள் இருந்தேயுள்ளன. பாதுகாப்புப்படைகள் அரசியல் தூண்டுதலின்பேரில் கொலைகள் புரிந்துள்ளதாகவோ ஆட்கள் காணாமல் போவதற்குக்காரணமாக இருந்ததாகவோ தகவல்கள் இல்லை. எனினும் தடுப்புக்காவலில் பொலீஸ் சித்திரவதையால் ஏற்பட்ட 13 இறப்புகள் பற்றி விரிவான அறிக்கைகள் வெளிவந்தன. அரசாங்கம் 38 தமிழர்களை பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் இவ்வாண்டில் வைத்திருந்தது. ஆனால் அச்சட்டத்தின் கீழ் புதிய கைதுகள் எவையும் நிகழவில்லை. விலக்கிக்கொள்ளப்பட்ட அவசரகாலச் சட்டவிதிமுறைகளைப் போன்றே, பி.ரி.ஏ அதிகாரமளிக்கப்படாத கைதுகளையும் பதில் சொல்லும் பொறுப்பற்ற தடுத்து வைப்புகளையும் அனுமதித்தது. பெண்களுக்கு எதிரான வன்முறையும் பாகுபாடும் சிறுவர்

பரத்தைமையும நிகழ்ந்தன. மத சிறுபான்மையினர் மீது வன்முறை அதிகரித்தது. தமிழர்க்கெதிரான தாபனரீதியான இனப்பாகுபாடு தொடர்ந்து ஒரு பிரச்சினையாக விருந்தது. கட்டாயத்தின் பேரில் பெண்களையும் சிறுவர்களையும் வேலையில் ஈடுபடுத்துவதற்காக கடத்திய சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன. சிறுவரைக் கொண்டு பாலுறவுத் தொழில் செய்வித்தலுக்கெதிராக அரசாங்கம் நடவடிக்கை எடுத்தது. சிறுவரைக்கொண்டு வேலை செய்வித்தல், தொழிலாளர்கள் உரிமைகள் மீதான மட்டுப்பாடுகள், அதிலும் குறிப்பாக ஏற்றுமதி உற்பத்தி வலயங்களில் (ஈபிசெற்கள்) மற்றம் வலுக்குறைந்தோர் மீதான பாகுபாடு என்பன பிரச்சினைகளாகவே தொடர்ந்தன.

எல்ரிரிஈ மோசமானவிதத்தில் மனித உரிமைகளை மீறும் செயல்களில் தொடர்ந்து ஈடுபட்டுவந்தது. தன்னிச்சையான கைதுகள், சித்திரவதைகள், தொல்லைப்படுத்தல், ஆட்கள் காணாமல் போவது, அச்சுறுத்தி பணம் சம்பாதித்தல், தடுத்து வைத்தல் ஆகிய செயற்பாடுகளுக்கும் பொறுப்பாயிருந்துள்ளது. பயமுறுத்தல் இயக்கமொன்றின் மூலம் எல்ரிரிஈ யாழ்ப்பாணத்திலும் கிழக்கிலும் தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ஊர் ஆட்சிசபையின் செயற்பாட்டினைத் தொடர்ந்து அடியறுத்து வந்துள்ளது. எல்ரிரிஈ அவ்வவ்போது வடக்கிலும் கிழக்கிலும் அரசியல் மற்றும் அரசாங்க செயற்பாடுகள் நிகழ்வதைத் தடுத்தும் வந்திருக்கிறது. அந்த ஆண்டின்போது எல்ரிரிஈ தனக்கு விரோதமான தமிழ் அரசியல் குழுக்களைச் சேர்ந்தோரையும் தன்னைப்பற்றி தகவல் தெரிவித்தோராகக் கருதப்பட்டவர்களுமாக 36க்கும் கூடுதலானோரைக் கொன்றதற்குப் போதுமான ஆதாரமும் இருந்துள்ளது. எல்ரிரிஈ வடக்கிலும் கிழக்கிலும் பெருமளவு பகுதிகளை தொடர்ந்தும் தன் கட்டுப்பாட்டில் வைத்துள்ளது. நாட்டில் அதன் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளுக்குச் சென்றுவருவதற்கு எல்ரிரிஈ ஊடகவியலாளர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட அனுமதியை வழங்கியிருந்தது. மக்களின் சுதந்திரமான நடமாட்டம் மீது எல்ரிரிஈ விதித்திருந்த சில கட்டுப்பாடுகள் தொடர்ந்தும் இருந்துள்ளன. தனது கட்டுப்பாட்டின் கீழுள்ள பகுதிகளில் வாழும் மக்களுக்குத் தங்களின் அரசாங்கத்தை மாற்றும் உரிமையை மறுத்ததுடன் எல்ரிரிஈ நியாயமான விசாரணைக்கு வகை செய்யாது அந்தரங்கம் பேணுவதிலுள்ள உரிமைகளை மீறித்தலையிட்டு, சிறார்களைப் போரில் ஈடுபடுத்தி, மற்றும் இன மத ரீதியில் சிறுபான்மையினராக உள்ளோர்மீது பாகுபாடுகாட்டியும் வந்திருக்கின்றது.

## மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தல்

## பிரிவு 1 - பின்வருவனவற்றிலிருந்து விடுபடுவது உட்பட ஆளின் சுயமரியாதைக்கு மதிப்பளித்தல்.

### அ. தன்னிச்சையாக அல்லது சட்டத்துக்கு முரணாக உயிரைப்பறித்தல்.

அரசியல் கொலைகள் நிகழவில்லையெனினும் மனித உரிமை அமைப்புக்கள் பொலிஸ் காவலில் இருந்தபோது 13 பேர் சித்திரவதையால் இறந்ததாக அறிவித்தன. உதாரணமாக பெப்ரவரி 22ல் களுத்துறை மாவட்டத்தில் உள்ள பதுரெலியா பொலிஸாரர் பெலநாதவிதானகே சனத் யசரத்தை ஒரு குடுப்பத் தகராறு காரணமாக அவரது சகோதரி வீட்டில் வைத்து விசாரித்தபோது அடித்தனர என்றும் அவர் தப்பியோடியபோது ஓர பொலீஸ் அதிகாரி சுட்டதில் அவர் கொல்லப்பட்டாரென்றும் கூறப்பட்டது. ஆண்டு இறுதியிலும் விசாரணை முடிவுறவில்லை.

ஏப்ரல் 19ல் முத்துதந்திரிகே சாமல் ரன்ஜித் கூரே என்பவர் மோதர பொலீஸிலும் மொரட்டுவ பொலீஸிலும் இரண்டு நாள் சித்திரவதையால் ஏற்பட்ட காயங்களால் மரணமானார். ஆண்டு இறுதியில் பொலீஸார் இது பற்றித் தொடர்ந்து விசாரணை செய்துகொண்டிருந்தனர்.

ஒக்டோபர் 3ல் பொலன்னறுவ பொலீஸார், மது விலக்கப்பட்ட தினத்தில் தமக்கு மதுபானம் விற்க மறுத்தாரென்பதற்காக ஹேர்மன் குவின்டஸ் பெரேரா என்பவரை கொன்றதாக ஊடக மற்றும் மனித உரிமைகள் அறிக்கைகள் தெரிவித்தன. பொலீஸார் பெரேராவையும் வேறு இருவரையும் பொலன்னறுவ பொலீஸ் நிலையத்துக்கு கொண்டு சென்றனர் என்றும் மறுநாள் பெரேரா இறந்து விட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது. ஓரதிகாரி, பெரேரா ஒரு சண்டையில் இறந்ததாகக கூறினார் ஆயினும் மற்ற பொலீஸ் அதிரிகள் இக்கூற்றை உறுதிப்படுத்தவில்லை. ஆண்டு இறுதியில் நாலு பொலீஸ்கார்கள் கைது செய்யப்பட்டு விசாரணைக்காக காவலில் வைக்கப்பட்டனர்.

நவம்பர் 21ல் வத்தளையில் வைத்து ஜெரால்ட் பெரேரா என்பரை இனம் தெரியாத கொலையாளிகள் சுட்டனர். 2002ம ஆண்டில் தான சித்திரவதை செய்யப்பட்டது பற்றி அவர் டிசம்பர் 2ல் சாட்சியம் அளிக்கவிருந்தார். சுடப்பட்ட 3 நாட்களால் அவர் இறந்துவிட்டார். டீசம்பர் 23ல் ஒரு பொலீஸ் சப் இன்ஸ்பெக்டரும் சட்டவரெனப்படும் சந்தேக நபரும் அப்பகுதியில் வைத்துக் கைது செய்யப்பட்டனர். ஆண்டு இறுதியில் அவர்கள் காவலில் விசாரணையை எதிர்நோக்கியிருந்தனர்.

சுனில் ே□மச்சந்திர என்பவர் 2003 ஜுலையில் பொலீஸ் காவலில் இறந்தது பற்றி பொலீஸாருக்கு எதிராக குற்றச்சாட்டுக்கள் கொண்டுவரப்படவில்லை. அதே மாதிரி 2003 நவம்பரில் எஸ் எல் குலத்துங்க என்பவர் காவலில் உள்ளபோது இறந்தமை குறித்தும் முன்னேற்றம் எதுவும் ஏற்படவில்லை.

பாதுகாப்பு படையினர்க்கு உள்ள தண்டனை விலக்கீட்டு உரிமை, இன்னும் ஒரு பிரச்சினையாகவே இருந்துவருகிறது. ஆண்டின் இறுதியளவில் அரசாங்கம் பாதுகாப்பு படையினரால் மேற்கொள்ளப்பட்டதான 5 பாலியல் வல்லுறவுகள், 100 சித்திரவதைகள் மற்றும் ஏறத்தாழ ஆட்கள் காணாமல்போன 1,240 சம்பவங்கள் தொடர்பில் விசாரணைகளைத் தொடர்ந்து மேற்கொண்டிருந்தது. 2003 ஜுலையில் 2 பொலிஸ் அதிகாரிகள் உட்பட 5 பேர் 2000 ஆண்டு பிந்துனுவெவ புனர்வாழ்வு முகாமில் 27 தமிழர் கொலையுண்டது சம்பந்தமாக மரணதண்டனை விதிக்கப்பட்டனர். அத்தண்டனை உடனடியாக 23 ஆண்டு கடூழிய சிறைத் தண்டனையாக குறைக்கப்பட்டது.

நவம்பர் 19ல் உயர் நீதிமன்ற நீதிபதி சரத் அம்பேபிட்டியவும் அவரது உடற்பாதுகாவலரும் நீதிபதியின் கொழும்பு இல்லத்துக்கு வெளியே வைத்து நாலு கொலையாளிகளால் சுட்டுக்கொல்லப்பட்டனர். அம்பேபிட்டிய பல பிரபல போதைவஸ்து வழக்குகளை நடத்தியவர் மற்றொரு வழக்கை மறுகிழமை விசாரிக்கவிருந்தார். ஆண்டு இறுதியில் பல கைதுகள் நிகழ்ந்துள்ளன.

மைலந்தனை கிராமத்தில் 1992ல் 35 தமிழ் சிவிலியன்கள் படுகொலை செய்யப்பட்டனர். அவர்களின் பிரதிநிதிகள் சந்தேக நபர்களான 21 இராணுவத்தினர் 2002ல் விடுதலை செய்யப்பட்தை எதிர்த்து அப்பீல் செய்யுமாறு பிரதம சட்ட அலுவலரை 2003ல் கோரியிரந்தனர். நடப்பு ஆண்டில் பிரதம சட்ட அலுவலர் மேன்முறையீடு செய்ய இடம் கொடுக்காதலால் இவ்வழக்கு கடைசித் தீர்ப்புடன் மூடப்பட்ட நிலையில் உள்ளது.

மார்ச் மாதத்தில் கிழக்கு எல்ரிரிஈ இராணுவத் தலைவர் கருணா வடக்கு எல்ரிரிஈயிடமிருந்து பிரிந்தபோது 120 போராளிகளும் சிவிலியன்களும் கிழக்கில் இரு தரப்புக்குமிடையில் நடந்த மோதலில் உயிரிழந்தனர். கருணா தரப்புக்கு அரசாங்கம் உதவியதாக செய்திகள் தெரிவித்தன.

மார்ச் மாதம் நிகழ்ந்த இந்த 120 உயிரிழப்புகள் தவிர நடப்பு ஆண்டில் எல்ரிரிஈ 81க்கு மேற்பட்ட எல்ரிரிஈக்கு எதிரான தமிழ் அரசியல் குழுக்களின் உறுப்பினரையும் கருணாவுக்கு ஆதரவான போராளிகளையும் வடக்கு கிழக்கு கொழும்புப் பாதுகாப்பு படைகளின் தமிழ் உளவாளி சந்தேக நபர்களையும் சிவிலியன்களையும் கொன்றதாக நம்பிக்கையான சாட்சியம் நிடைத்தது. எல்ரிரிஈக்கு எதிரான தமிழ் அரசியல் கட்சிகளின் முன்னைய இன்றைய உறுப்பினர் இலக்கு வைக்கப்பட்டனர். நடப்பு ஆண்டில் ஈழம் மக்கள் ஜனநாயகக்கட்சியின் (ஈபிடிபி) இன்றைய, முன்னைய உறுப்பினர்கள் கொல்லப்பட்டனர். அவர்களில் ஒருவர் கிழக்கு பட்டின சபை உறுப்பினர் வி ஆர் பமலன் ஆவார். மற்றவர் ஊடக செயலாளர் பாலநடராஜ ஐயர். மார்ச் மாதத்தில் இனம் தெரியாத கொலையாளிகள் பாராளுமன்ற தேர்தலுக்கு வேட்பாளராக நின்ற சின்னத்தம்பி சுந்தர்பிள்ளையைச் சுட்டுக் கொன்றனர். கொலையாளிகளின் முதல் முயற்சி அவரது வீட்டருகே தோல்வி காண, பின்னர் மருத்துவமனையில் அவரைக் கொன்றனர். மார்ச் மாதம் நடந்த மோதலின் பின்னர் எல்ரிரிஈ கருணா குழுவில் மேலும் 43 பேரைக் கொன்றதாக நம்பகமான செய்திகள் கூறுகின்றன. ஓகஸ்ட் 24ல் அம்பாறை அக்கரைப்பற்று நீதவான் மன்றில் கருணா ஆதரவாளர் பெரியம்மான் ஜெயக்குமார் எல்ரிரிஈ உறுப்பினர் ஒருவரால் சுடப்பட்டபோது அவர் உயிரிழந்தார். இரு சிறை அதிகாரிகள் காயமடைந்தனர். ஜூலை 15ல் எல்ரிரிஈயின் வன்னித்தரப்புக்கு ஆதரவான மட்டக்களப்பு சிறைக் கைதி ஒருவர் கருணா ஆதரவாளரான கணபதிப்பிளைளை மகேந்திரனைக் கொன்றார். (பிரிவு 2 அ வைப்பார்க்கவும்)

நடப்பு ஆண்டில் இராணுவத்துக்கு உளவு பார்ப்பவர்களௌன, கந்தையா யோகராசா திசவீரசிங்கம் துஷ்யந்தன் என்போர் உட்பட, 10 பேரை எல்ரிரிஈ கொன்றது.

ஜூலை 7ல் எல்ரிரிஈ தற்கொலைக் குண்டுதாரி ஒருவர் தனது உடலில் பொருத்தியிருந்த வெடிபொருளை இயக்கி ஒரு பொலீஸ் நிலையத்தில் தன்னையும் நாலு பொலீஸகாரர்களையும் கொன்றார். அவரது உண்மையான இலக்கு ீந்து விவகார அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா என நம்பப்பட்டது. அவர் நீண்டகாலமாக எல்ரிரிஈக்கு எதிராக செயற்படும் அமைச்சராவார்.

மார்ச் மாதம் நிகழ்ந்த மோதலின் பின் கருணா குழு 26 எல்ரிரிஈ போராளிகளை கொன்றதாகக் கூறப்பட்டது. அவர்களில் மட்டக்களப்பு அரசியல் பிரிவு தலைவர் எஸ் சேனாதிராஜா ஒருவராவார். கருணா குழு 7 சிவிலியன்களையும் கொன்றது. அவர்களில் எல்ரிரிஈ ஆதரவாளரான பத்திரிகையாளர் ஐயாத்துரை நடேசன், மட்டக்களப்பில் மே 31ல் கொல்லப்பட்டார். (பிரிவு 2அ வைப்பார்க்கவும்) கருணாவுக்கும் அவரது போராளிகளுக்கும் எல்ரிரிஈ போராளிகளுடன் சண்டையிட உதவியாக அரசாங்கம் அவர்களுக்கு பாதுகாப்பும் இராணுவ உதவியும் வழங்கி வருவதாக செய்திகள் வெளிவந்தன.

**ஆ. காணாமல்போனமை**

கடந்த ஆண்டின்போது, அரசியல் தூண்டுதலின் பேரில் பாதுகாப்புப்படைகளின் செயற்பாடு களினால், ஆட்கள் காணாமல் போனதாகத் தகவலில்லை.

ஐ. நா. செயற்குழு, 2000ல் தயாரித்த ஓர் அறிக்கையில் மிகக் கூடுதலான ஒரு தொகையில், "தெளிவுபடுத்தப்படாத" காணாமல் போனமைக்குரியது, என்ற வகையில் நாட்டை நிரலிட்டிருந்தது.

ஆனாலும் நடப்பு ஆண்டின்போது இவை பற்றி முன்னேற்றங்கள் எதுவுமில்லை. 1995 முதல் 2003 வரை ஆட்கள், சொத்துக்கள், கைத்தொழில்கள் புனருத்தாரண அதிகாரசபை 17,740 காணாமல்போன ஆட்களின் அடுத்த உறவினருக்கு நஷ்டஈடு வழங்கியது.. ஆண்டு இறுதியில். நிவாரண, புனருத்தாரண, அமைச்சு மேலும் 960 உறவினருக்கு நஷ்டஈடு வழங்க அமைச்சரவையிடம் அங்கீகாரம் கோரி விண்ணப்பித்திருந்தது. 2000ம் ஆண்டிலிருந்து ஐநா பணிக்குழுவுக்கு 12 காணாமல்போனமைகள் அறிவிக்கப்பட்டிருந்தன. அவற்றில 7 இன்னும் தீர்க்கப்படாதுள்ளன.

1996-1997 காலப்பகுதியில் யாழ்ப்பாணப்பகுதியில் நிகழ்ந்த காணாமல் போனமை சம்பந்தப்பட்ட விவகாரம் பற்றி விசாரனை நடத்துவதற்கென, அரசாங்கம் 2002, நவம்பரில் ஒரு புதிய விசாரணைக்க்குழுவை அமைத்தது, நடப்பு ஆண்டில் விசாரணைக்குழு காணாமல் போனோரின் அடுத்த உறவினருக்கு அவர்கள ஆயுதப் படைகளால் கைது செய்யப்பட்டபின் காணாமல் போனமையை உறுதிப்படுத்தி கடிதங்கள் அனுப்பியது. உறவினர்கள் அக்கடிதங்களை ஆட்கொணர்வு மனுக்களை ஆதரிக்கப் பயன்படுத்தியுள்ளனர் ஆண்டு இறுதியில் 45 வழக்குகள் விசாரணைக்குக் காத்திருந்தன.

கடந்த கால காணாமல்போனமைகளுக்காக முன்னைய ஆண்டுகளைப் போல பாதுகாப்பு படை வீரர்களுக்கெதிராக குற்றப்பத்திரங்கள், விசாரணைகள், வழக்குகள் எவையும் தாக்கலாகவில்லை. 1994ல் நியமிக்கப்பட்ட 3 பிரதேச விசாரணைக் குழுக்களும் 1998ல் நியமிக்கப்பட்ட நாலாவது குழுவும் மொத்தம 21,215 காணாமல்போனமைகள் 1988க்கும் 1994க்குமிடையில் நடந்ததாக அறிவித்துள்ளன. இவற்றில பெரும்பாலானவை ஜனதா விமுக்தி பெரமுன என்ற மக்கள் விடுதலை முன்னணியின் எழுச்சிக்காலமான 1988-89ல் நடந்துள்ளதாக அவை அறிவித்துள்ளன. பலர் தமது வீடுகளிலிருந்து பெரும்பாலும் பாதுகாப்பு படைகளால் வில்லங்கமாக அகற்றப்பட்டு காணாமல்போனதாக குழுக்கள் கண்டுபிடித்தன. நடப்பு ஆண்டில் இவை பற்றி முன்னேற்றங்கள் எவையும் ஏற்படவில்லை. எதிர்பார்க்கப்படவும் இல்லை.

நடப்பு ஆண்டில் எல்ரிரிஈ சிவிலியன்களைத் தொடர்ந்து தடுத்து வைத்தது. அனேகமாக பணம் பெறுவதற்காக அவர்களை, கிழக்கில் குறிப்பாக முஸ்லிம்களை தடுத்து வைத்தது. ஜூலை மாதத்தில் அது திருகோணமலைப்பகுதி முஸ்லிம்கள் 13 பேரை விறகு பொறுக்கும்போது கடத்தி அவர்களை விடுவிக்க பணம் கேட்டது.. அன்றே விடுவிக்கப்பட்ட 10 பேரைக் கொண்டு சரீர உழைப்பு மேற்கொள்ளப்பட்டதென்றும் இதர 3 பேரும் பல நாட்கள் தடுத்து வைக்கப்பட்டு அடிக்கப்பட்டபின்னரே விடுவிக்கப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டது.

ஆண்டு இறுதியில் எல்ரிரிஈ வயது வந்தோரைக் கடத்தியதாக 120க்கு மேற்பட்ட செய்திகள் வெளியாகின.

## இ. சித்திரவதை மற்றும் பலவிதகொடுமை, மனிதாபிமானமற்ற அல்லது தரக்குறைவாக நடத்தல் அல்லது தண்டனை வழங்கல்.

1994ன் சித்திரவதைச்சட்டத்திற்கெதிரான பொது இணக்க ஒப்பந்தம் (காட்டா, சிஏரிஏ) இந்த வதையைத் தண்டனைக்குரிய ஒரு குற்றச் செயலாகப்பிரகடனப்படுத்தியுள்ளது. நடைமுறையில். இந்த ஐ.நா.பொது இணக்க ஒப்பந்தத்துடன் காட்டா கணிசமான அளவில் " ஒத்துப்போவதான" கருத்தை அரசாங்கம்

நிலைநாட்டினும் அந்த ஒப்பந்தத்தின் பல ஏற்பாடுகளை காட்டா நிறைவேற்றுவதில்லை. மனித உரிமைகள் குழுக்களின் கணிப்பின்படி அதன் பெறுபேறு, குறிப்பிட்ட சூழ்நிலைகளின் கீழ் சித்திரவதை தடுக்கப்பட்டிருப்பினும் ஏனையவற்றின் கீழ் அது அனுமதிக்கப்படுவதாகவும் உள்ளது. எனவே ஒப்பீட்டளவில் குறைவான தண்டனை விலக்கீட்டுரிமையுடன் சித்திரவதை தொடர்கிறது. சித்திரவதை உட்பட எந்தச் சூழ்நிலைகளாயினுஞ்சரியே பெறப்படும், குற்றத்தை ஒப்புக்கொள்ளும் விதத்திலான சான்றுகள்,அந்நபர் நீதிமன்றத்துக்குக் கொண்டுவரப்படும்வரை ஒருவனைத் தடுத்து வைப்பதற்குப் போதுமான ஓர் ஆதாரம் என பி.ரி.ஏ நிலை நிறுத்துகிறது. ஆயினும் நடப்பு ஆண்டில் பிரிஏ சட்டத்தின் கீழ் கைதுகள் எவையும் நடைபெறவில்லை. (பிரிவு 1 ஈயைப்பார்க்க)

சித்திரவதை முறைகளில், மின் அதிர்ச்சிப்பிரயோகம், அடுத்தடுத்தடித்தல், மணிக்கட்டுகள் அல்லது கால்களைச் சேர்த்துக்கட்டி கோணல்மாணலான நிலைகளில் தொங்க விடுதல், தீயினால் சுடுதல், மேசை இலாச்சிகளிலிட்டு அண்டவிதைகளை அடித்தல், முச்சுத்திணறும் அளவுக்கு நீரில் அமிழ்த்தி வைத்தல் போன்றவையும் அடங்கும். ஏனைய நேர்வுவகைகளில் பலியாட்கள் நீண்டநேரத்திற்கு அசாதாரண நிலைகளில் இருப்பதற்குக் கட்டாயப்படுத்தப்படல், புழுப்பூச்சி கொல்லி மருந்து, மிளகாய்த்தூள் அடைத்த பைகளை உடலில் கட்டித்தொங்கவிடல், அல்லது எரிபொருட்களை தலைகள் மீது வைத்தல் என்பனவும் இடம்பெறும். அவர்களின் முறைகேடான கொடிய நடத்தைகளால், தங்களின் எலும்புகள் முறிந்ததாகவும், கடுமையான காயங்கள் ஏற்பட்டதாகவும் தடுத்துவைக்கப்பட்டோர் முறையிட்டனர். நடப்பு ஆண்டில் பொலீஸ் தடுப்புக்காவலின்போது, 13 மரணங்கள் நேர்ந்திருக்கின்றன.(1 பிரிவு 1அ வைப்பார்க்க).

பொலீஸ் சித்திரவதை பற்றி வந்த 42 முறைப்பாடுகளில் வடக்கு கிழக்குக்கு வெளியே உள்ள பொலீஸ நிலையங்களிலிருந்து பல்வேறு எண்ணிக்கைகள அறிவிக்கப்பட்டுள்ளன. பல நம்பகமான என்ஜிஓ கள் காவலில் வைக்கப்படுபவர்களைப் பொலிசார் சித்திரவதை செய்வது உண்மை எனத் தெரிவிக்கின்றன. உதாரணமாக ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழு ஜனவரி 5ல் மாத்தளைப் பொலீசார் ஜயசேகர விதானகே சமன் பிரியங்கார என்பவரின் ஆணுறுப்பின் மீதும் தொடைகளின் மீதும 10 நிமிடங்களுக்கு கொதிநீர் ஊற்றினர் என அறிவிக்கிறது. இதனால் அவருக்கு கடுமையான எரிகாயங்கள் ஏற்பட்டன. இந்த சித்திரவதைக்கு எதிராக அவர் முறைப்பர்டு செய்தமையால் அவரைச் சட்டவிரோதமாக கைது செய்து அவர் மீது இரண்டாவது தடவையும் சித்திரவதை புரிந்துள்ளனர். ஆண்டு இறுதியில் இச்சம்பவத்தை தேசிய பொலிஸ் விசாரணைக்குழு விசாரித்துக் கொண்டிருந்தது.

பெப்ரவரி 2ல் பாலித திஸ்ஸ குமார கோரலலியனகே என்பவர் சட்டவிரோதமாகக் கைதுசெய்யப்பட்டு களுத்துறை வெலிப்பன்ன பொலீஸ் நிலையத்தில் வைத்து சித்திரவதை செய்யப்பட்டதாக ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழுவும் ஊடகங்களும் அறிவித்தன. பொலீஸார் அவரை கிரிக்கெட் மட்டையால் கடுமையாகத் தாக்கி ஒரு சயரோக நோயாளியை அவரது வாய்க்குள் எச்சில் துப்ப வைத்திருந்தனர். கோரலலியனகே பின்னர் சயரோக நோயாளியானார். மே மாதம் உச்ச நீதிமன்றம் அவரது வழக்கை விசாரிக்க இணங்கியது. ஆண்டு இறுதியில் வழக்கு முடிவுறாமல் இருந்தது.

செப்டம்பர் 27ல் யாழ்ப்பாண மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலர் றுவன் சந்திரசேகர யாழ்ப்பாண தலைமை பொலீஸ் நிலையத்துப் பொலீஸாரால் தாக்கப்பட்டார். ஆச்சமயம் அவர் இருக்குமிடம் தெரியாமல் காவலில் வைக்கப்பட்டிருந்த ஒருவரது குடும்பத்தினர் செய்த முறைப்பாடு ஒன்றை விசாரித்துக் கொண்டிருந்தார். ஆணைக்குழு பொலீஸ்காரருக்கு எதிராக சித்திரவதை வழக்கு ஒன்றைத் தொடர்ந்தது.

ஆண்டு இறுதியில் ஆணைக்குழுவும் சிரேஷ்ட பொலீஸ் சுப்பிரண்டனும் வழக்கை விசாரித்துக் கொண்டிருந்தனர்.(பிரிவு 1ஈ, 4 பார்க்க).

முன்னைய ஆண்டுகளைப் போல அல்லாது நடப்பு ஆண்டில் காவலில் வன்புணர்ச்சி அல்லது பாலியல் தாக்குதல் நடந்ததாக அறிவிக்கப்படவில்லை. சர்வதேச மன்னிப்பு சபையின் அறிக்கைப்படி 2002ல் திருட்டு குற்றச்சாட்டு ஒன்றின் பேரில் கைது செய்யப்பட்ட நந்தினி ஹேரத் குருநாகல மாவட்டத்தில் உள்ள வாரியப்பொலை பொலீஸ் நிலையத்தில் வைத்து பாலியல் சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டார். 2003 ஜுலையில் அப் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரியும் வேறு 5 பேரும் உயர் நீதிமன்றத்தில் இலங்கை சித்திரவதைச்சட்டத்தின் கீழ் குற்றஞ்சாட்டப்பட்டனர். நடப்பு ஆண்டில் ஹேரத்துக்கு எதிரான வழக்கை வாரியப்பொலை நீதிமன்றம் தள்ளுபடி செய்தது. அப்பெண்ணைச் சித்திரவதை செய்ததாக 3 பொலீஸ்காரர் குரநாகல உயர் நீதிமன்றத்தில் குற்றஞசாட்டப்பட்டனர். ஆண்டு இறுதியல் வழக்கு தொடர்ந்து நடந்துகொண்டிருந்தது.

அரசியலமைப்பில், மனித உரிமைகள் ஏற்பாடுகளின் கீழ் சித்திரவதைக்கு உள்ளான பலியாட்கள், நஷ்ட ஈடுகோரி, உயர் நீதிமன்றங்களிலோ அல்லது உச்ச நீதிமன்றத்திலோ சிவில் வழக்குத் தொடுப்பதற்கு வகை செய்யப்பட்டிருக்கிறது. நீதி மன்றங்கள், ஏறத்தாழ 142 டொலர்கள்(14,200ரூபாய்கள்) முதல் 1825 டொலர்கள் வரை (182,500 ரூபாய்கள்) வரையிலான தொகைகளை நஷ்டஈடாக வழங்கியுள்ளன. வழக்கை விசாரித்த நீதிபதியின் தீர்மானத்தின் அடிப்படையில் குற்றமிழைத்த தரப்பினர் தெண்டப்பணங்களைச் செலுத்தினர்.

சில நேர்வுகளைப் பொறுத்தவரை, சித்திரவதைகளுக்காகக் குற்றவாளிகளாகக் காணப்பட்ட பாதுகாப்புப்படையின் மீது விதிக்கப்பட்ட தெண்டப்பணங்களை அரசாங்கம் செலுத்தவில்லை.

சித்திரவதை முறைப்பாடுகள் தொடர்பில் கருத்தினைக் கூர்ப்புடன் ஈர்ப்பதற்காக ஏ.ஜியின் அலுவலகமும் குற்ற விசாரணைப்பிரிவும் உரிய கூறுகளை அமைத்தன. அந்த ஆண்டின்போது, அப்பிரிவுகள் வழக்குத் தொடர்வதற்காக 44 நேர்வுகளை அனுப்பியிருந்தன; அவற்றில் 11 மீது வழக்குகள் பதிவு செய்யப்பட்டன; மற்றவை ஆண்டு இறுதியில் நடவடிக்கைக்காக காத்திருந்தன. முந்திய ஆண்டுகளில் இரண்டு வழக்குகளில் குற்றவாளித் தீர்ப்பு வழங்கப்பட்டது. மனிதஉரிமைகள் விவகாரங்கள் தொடர்பில் பாராளுமன்றங்களுக்கிடையேயான நிரந்தர நிலையான குழுவும், சர்வதேச அமைச்சுக்களுக்கிடையேயான செயற் குழுவும், சித்திரவதை பற்றிய குற்றவியல் விசாரணையை கண்டறிவதில் தொடர்ந்தும் ஈடுபட்டிருந்தன. ஜூன் மாதத்தில் மனித உரிமைகள் ஆணைக்குழு சித்திரவதைத் தடுப்பு கண்காணிப்பு பிரிவை தனது 'சித்திரவதைளை அடியோடு பொறுப்பதில்லை' என்ற கொள்கையை செயற்படுத்தவென ஏற்படுத்தியது. (பிரிவு 4ஜப் பார்க்க) இப்பிரிவைச் சேர்ந்த அலுவலர்க்கு அது விசேட பயிற்சியை வழங்கி சித்திரவதை முறைப்பாடுகளுகளைப் பொறுத்தவரை உடனடி விசாரணை என்ற கொள்கையை ஏற்படுத்தியது. போலீஸ் காவலில் ஏற்படும் சாவுகளை விசாரிக்க விசேட குழுக்களையும் அமைத்தது.. ஆண்டு இறுதியில் இந்த பிரிவின் வெற்றியை அளவிடமுடியவில்லை.

சிறைக்கூட நிலைமைகள் சர்வதேச தரத்துக்கேற்ப காணப்படவில்லை. கைதிகள் அளவுக்கு அதிகமாக வைக்கப்பட்டமை, உடல் நலத்திற்குகந்த வசதிகளின் பற்றாக்குறை என்பனவே காரணம். பெண்கள் ஆண்களிடமிருந்து பிரித்து வைக்கப்பட்டிருந்தனர். சில நேர்வுகளில் இளமைப்பருவத்தினர், வயதுவந்தோர்களிடமிருந்து பிரித்துத் தனியாக வைக்கப்படவில்லை. மன்று விசாரணைக்காகத் தடுத்து

வைக்கப்பட்டோர், குற்றவாளிகளாகக் காணப்பட்டோரிடமிருந்து வேறாக பிரித்து வைக்கப்பட்டிருக்கவில்லை. அரசாங்கம் நடப்பு ஆண்டின் போது சிறைக்கூடங்கள் மற்றும் பொலீஸ் நிலையங்கள் உட்பட தடுப்பு வசதிகளைக் கொண்ட 22 அரசாங்க அமைவுகளுக்கு சுயேச்சையான மனித உரிமைகள் மற்றும் ஐ.சி.ஆர்.சி சார்ந்த பார்வையாளர்களை 60 தடவைகள் சென்றுவர அனுமதித்திருந்தது. எச்.ஆர்.சி யும் 142 பொலிஸ் நிலையங்கள் மற்றும் தடுப்பு வசதிகளைக் கொண்ட 5 அமைவுகளுக்கும் சென்று வந்தது. ஐ.சி எச்.ஆர்.சி யின் பிரதேச அலுவலகங்களிலிருந்து 250 பொலீஸ் நிலையங்களுக்கும் 19 தடுப்பு நிலையங்களுக்கும் வருகைகள் மேற்கொள்ளப்பட்டன.

எல்ரிரிஈ சித்திரவதையை வழமையாக மேற்கொள்கிறது. (பிரிவு 1ஆ வைப் பார்க்க). அதனால் நடத்தப்பட்டுவரும் தடுப்பு நிலையங்களிலும் நிலைமைகள் மோசமானதாகவே இருந்துள்ளன. ஐ.சி.ஆர்.சி, 6 தடவைகள் அதன் சிறைச்சாலைகளுக்கும் 18 தடவைகள் அதன் பொலீஸ் நிலையங்களுக்கும் விஜயம் செய்துள்ளது. நம்பகமான அவதானிகளின் பார்வையில் இச் சிறைகளில் நிலைமை, உள்நாட்டு தரங்களின் படி, ஏற்புடையதாக இருந்தது. (பிரிவு 1 ஈ யைப் பார்க்க) வன்னியிலும் கிழக்கிலும் உள்ள எல்ரிரிஈயின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் உள்ள இதர தடுப்புக்காவல் நிலையங்களுக்குச் செல்ல ஐசிஆர்சிக்கு வழி இருக்கவில்லை.2

**ஈ தன்னிச்சையான கைது அல்லது தடுப்பு**

உள்நாட்டு பாதுகாப்பு அமைச்சு 66,000 உறுப்பினர் கொண்ட பொலீஸ் படையையும் 6,000 பேர் கொண்ட விசேட அதிரடிப் படையையும் நிர்வகிக்கிறது. நாட்டில் பெரும்பாலான பகுதிகளின் பாதுகாப்புக்கு இவையே பொறுப்பு. பொலீஸ் படையிலுள்ள சிரேஷ்ட அதிகாரிகள் பொலீஸாருக்கு எதிரான முறைப்பாடுகளை விசாரிப்பர். அத்துடன் சிவிலியன்களைக் கொண்ட தேசிய பொலீஸ் ஆணைக்குழுவும் விசாரணைகளை நடத்தும். பொலீஸாருக்குள்ள தண்டனை விலக்கு உரிமை பொதுவாக பொலீஸ் சித்திரவதைகளைப் பொறுத்தவரை ஒரு பிரச்சினையாகும். ஊழலும் பொலீஸ் துறையில் ஒரு பிரச்சினை என பல என்ஜிஓக் கள் கூறுகின்றன. அரசாங்கம் 2002ல் முற்றிலும் சிவிலியன்களைக் கொண்ட தேசிய பொலீஸ ஆணைக்குழவை அமைத்தது. பொலீஸ் மா அதிபரைத் தவிர ஏனைய அனைத்துப் பொலீஸருடையவும் நியமனம், பதவியுயர்வு, இடமாற்றம், ஒழுக்காற்றல், விலக்கல் ஆகியவற்றுக்குரிய அதிகாரம் ஆணைக்குழவிடம் கையளிக்கப்பட்டது. நடைமுறையில் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கும் அதிகாரத்தை ஆணைக்குழு மா அதிபரிடம் வழங்கியுள்ளது. பொலீஸாருக்கு எதிரான பொதுமக்களின் முறைப்பாடுகளை விசாரிக்கும் நடைமுறைகளை ஏற்படுத்தும் அதிகாமும் ஆணைக்குழுவுக்கு உண்டு. நடப்பு ஆண்டில் 1192 முறைப்பாடுகளை ஆணைக்குழு விசாரித்தது. இவற்றில் 10 சத விகிதமான முறைப்பாடுகள் மேல் நடவடிக்கைக்காக சம்பந்தப்பட்ட பொலீஸ் சுப்பிரண்டுகளிடம் கையளிக்கப்பட்டன.

தன்னிச்சையான கைது, தடுப்பு என்பனவற்றை சட்டம் தடை செய்கிறது. எனினும் நடப்பு ஆண்டின்போது தன்னிச்சையான கைதுகளும் தடுத்து வைக்கப்பட்டமையும் சம்பவித்ததாக செய்திகள் வெளிவந்தன. கொஜல, திருட்டு, கொள்ளை, வன்புணர்ச்சி முதலிய குற்றங்கள் தொடர்பில் ஆளொருவரைக் கைது செய்ய வாரண்ட் தேவையில்லை. சட்டத்தின் கீழ் அவர் கைது செய்யப்பட்டதற்கான காரணத்தை அதிகாரிகள் கைதுசெய்யப்பட்டவருக்கு கட்டாயம் தெரியப்படுத்த வேண்டும், அத்தோடு அவரை 24 மணித்தியாலங்களுக்குள் ஒரு நீதவானுக்கு முன் ஆஜர்படுத்த வேண்டும். நடைமுறையிலோ தடுத்து வைக்கப்பட்ட ஆட்கள் பொதுவாக ஒரு சில நாட்களுக்குள் ஒரு நீதவான் முன் கொண்டுவரப்படுகின்றனர். அவர் பிணையை அனுமதிக்கலாம்; அல்லது 3 மாதங்கள் வரை அல்லது அதற்குக் கூடுதலான காலத்திற்கு

விசாரணைக்கு முன்னதான விதத்தில், தொடர்ந்து தடுத்துவைப்பதற்கான உத்தரவைப் பிறப்பிக்கலாம். கொலை போன்ற குற்றங்கள் விடயத்தில் மஜிஸ்ற்றேற் விளக்கமறியல் உத்தரவு வழங்கவேண்டும். உயர் நீதிமன்றம் மட்டுமே பிணை வழங்கலாம். சந்தேக நபர்களுக்காக சட்டத்தரணிகள் ஆஜராமு் உரிமை உண்டு. உயர் நீதிமன்ற அல்லது அப்பீல் நீதிமன்ற குற்றவியல் வழக்குகளில் ஆதரவற்ற சந்தேக நபர்களுக்கு சட்டத்தரணி நியமிக்கப்படுவார். வேறு வழக்குகளில் அல்ல.

தண்டனை விலக்கு உரிமை ஒரு பிரச்சியையாக இருந்துள்ளது. பாதுகாப்பு படையினர் மனித உரிமை மீறல்களை செய்திருக்கக்கூடிய பெரும்பாலான விடயங்களில் அரசாங்கம் பொறுப்பானவர்களைக் கண்டுபிடித்து நீதிக்குமுன் நிறுத்தத் தவறிவிட்டது. சித்திரவதை வழக்குகளில் நீதிபதிகள் குற்றவாளியாகத் தீர்ப்பளிக்கத் தயங்குவதாக மனித உரிமைகள் அமைப்புகள் உணர்ந்துள்ளன. சித்திரவதைச்சட்டம் தண்டனையை 7 ஆண்டு சிறைவாசமாகக் கட்டாயமாகியிருப்பதே இதற்குக் காரணம். மனித உரிமைகள் அமைப்புகள் கூற்றுப்படி மருத்துவ சாட்சியம் பெறுவது கடினம். ஏனெனில் நாட்டில் 25 சட்ட-மருத்துவ நிபுணர்கள் உள்ளனர். சித்திரவதைக்குள்ளான பெரும்பாலானவர்களைப் பரிசோதிப்பவர்கள் அனேகமாக சித்திரவதை மதிப்பாய்வு செய்வதில் பயிற்சி பொறாதவரகள். சில சமயங்களில் மருத்துவர்கள் பொலீஸாரால் பயமுறுத்தப்பட்டார்கள். இதன் அர்த்தம் சித்திரவதைப் பலியாட்கள் சரியான மருத்துவ அறிக்கை பெறுவது கடினமான காரியம். என்பதாகும்.

உச்ச நீதிமன்றமும் தனிக் குடிமக்களும் பாரப்படுத்திய வழக்குகளில் தடுப்புக் காவலில் உள்ளவர்கள் சட்டரீதியாக தடுத்துவைக்கப்பட்னரா என மனித உரிமைகள் ஆணைக்குழு விசாரித்தது.

பெப்ரவரி மாதம் ஜனாதிபதி 2,000 கைதிகளுக்கு பொதுமன்னிப்பு வழங்கினார். சட்டவிரோதமாய்க் கூடியமை, லஞ்சம், கொள்ளை, திருட்டு, தேசத்துரோகம், ஆள்கடத்தல், சிறுவர்க்கு குருரமாகத் தொல்லை கொடுத்தல், போதை வஸ்து குற்றம்ஈ அல்லது வன்புணர்ச்சி ஆகிய குற்றங்களைப் புரிந்தவர்க்கு மன்னிப்பு வழங்கப்படவில்லை.

### உ. நியாயமான பகிரங்க வழக்கு விசாரணை மறுப்பு

அரசியலமைப்புச் சட்டம், சுகந்திரமானதொரு நீதிமுறைமைக்கு வகை செய்கிறது. அரசாங்கம் நடைமுறையில் இந்த ஏற்பாட்டுக்கு பொதுவாக மதிப்பளித்து வருகிறது. ஜனாதிபதியே உச்ச நீதிமன்றம், உயர் நீதிமன்றம் மற்றும் முறையீட்டு நீதிமன்றம் என்பனவற்றிற்கு நீதிபதிகளை நியமனம் செய்கிறார். பிரதம நீதியரசர் மற்றும் 2 உச்ச நீதிமன்ற நீதியரசர்களைக்கொண்ட ஒரு நீதிசேவை ஆணைக்குழு, கீழ்மட்ட நீதிமன்ற நீதிபதிகளை நியமிப்பது மற்றும் இடம்மாற்றஞ் செய்வது தொடர்பிலான பொறுப்புக்களை கொண்டுள்ளது. நடத்தைக்கேடு அல்லது தகைமையீனம் காரணமாக நீதிபதிகள் பதிவியிலிருந்து அகற்றப்படக் கூடும், ஆனால் விசாரணை நடத்தப்படுவதைத் தொடர்ந்து ஜனாதிபதி -பாராளுமன்றம் ஆகியோரின் கூட்டுச் செயற்பாட்டை அடுத்தே அத்தகைய நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

குற்றவியல் வழக்குகளைப் பொறுத்தவரை, குற்றம்சார்த்தப்பட்டவர்களை ஜுரர்கள் பகிரங்கமாக விசாரணை செய்கின்றனர். அவர்கள் மீது சார்த்தப்பட்டுள்ள குற்றங்கள் பற்றியும் உள்ள சாட்சியங்கள் பற்றியும் தெரிவிக்கப்படுவதோடு தங்களின் சார்பில் வாதிடச் சட்டத்தரணிகளை அமர்த்துவதற்கும் ,முறையீடு செய்வதற்கும் உரிமை வழங்கப்பட்டிருக்கிறது. குற்றவியல் சார்ந்த வழக்குகளில் விசாரணைக்குட்படும் வறுமைப்பட்ட ஆட்களுக்குத் தங்களின் சார்பில் வாதாட, உயர்நீதிமன்றத்திலும், மேன்முறையீட்டு

நீதிமன்றத்திலும், அரசாங்கம் வழக்கறிஞர்களின் சேவையை வழங்குகிறது; ஆனால் ஏனைய வகைப்பட்ட வழக்குகளில் இவ்வுதவி வழங்கப்படுவதில்லை. குற்றஞ்சார்த்தப்பட்டோருக்கு தனிப்பட்ட வகையில் சட்டஉதவி வழங்கும் அமைப்புக்கள் , உதவிபுரிந்துவருவதும் குறிப்பிடத்தக்கது. அத்தோடு தங்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு வசதியற்ற நிலையிலுள்ளொருக்குகாக நீதி அமைச்சு , சமூக சட்ட உதவி நிலையங்களை நடத்திவருவதோடு, அவற்றை அவ்அவ்விடங்களிலுள்ள சமுதாயங்களுக்கு அறிவு புகட்டும் வள நிலையங்களாகவும் பயன்படுத்தி வருகிறது. எனினும் ஆண்டு இறுதிவாக்கில் அந்த சட்ட உதவி நிலையங்கள் எந்தவொரு வழக்கையும் நடத்தவில்லை. பி.ரி.ஏ யின் கீழ் தொடரப்படும் வழக்குகளில் ஜூரர்கள் அற்றதான விசாரணைகளும் இடம்பெற்றே வருகின்றன. குற்றவியல் வழக்கு விசாரணைகளின்போது, சித்திரவதை உட்பட பல்வேறு முறைகேடான வழிகளில் பலாத்காரமாகப்

பெறப்படும் வாக்கு மூலங்கள் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை. ஆனால் பி.ரி.ஏ யின் கீழ் அவை அனுமதிக்கப்படுகின்றன. அத்தகைய தங்களின் வாக்கு மூலங்கள் முறைகேடான விதங்களில் பெறப்பட்டன என்பதை ஆதார பூர்வமாக நிரூபிக்கும் பாரிய பொறுப்பு குற்றஞ்சார்த்தப்பட்டவர்களையே சார்ந்துள்ளது. பி.ரி.ஏ வழக்குகளைப் பொருத்தவரை அவர்களுக்கு மேன்முறையீடு செய்யும் உரிமையுண்டு. சில வழக்குகளைப் பொறுத்தவரை நீதி மீள்பரிசீலனைக்கு அமைய தங்களின் வழக்கு விசாரணைக்காக நிர்வாகக்கட்டளைக்கியைய 18 மாதங்கள் வரை சிறையில் கழிக்க நேரிடலாம். அவர்கள் மீதான வழக்குகள் விசாரணைக்கு வந்ததும் ஒப்பீட்டளவில் தீர்ப்புகள் விரைவாகவே வழங்கப்பட்டுவிடுகின்றன.

கொழும்பிலும் தெற்கிலும் அநேகமான நீதிமன்ற விசாரணைகள் ஆங்கிலம் அல்லது சிங்களத்திலேயே நடைபெறுகின்றன. இதற்கு காரணம் நீதிமன்றத்தில் நியமனம் செய்யப்படும் உரைபெயர்ப்பாளர் எண்ணிக்கை குறைவாயிருப்பதாகும். இதன் காரணமாக தமிழ் பேசும் பிரதிவாதிகள் நியாயமானதொருவிதத்தில் தமது கட்சியை எடுத்துரைப்பதில் உள்ளதகைமை மட்டுப்படுத்தப்படுகிறது என்பது யதாத்தம். வடக்கிலும் கிழக்கிலும் வழக்கு விசாரணைகளும் சாட்சியங்களின் பதிவுகளும் தமிழிலும் ஆங்கிலத்திலும் இடம்பெறுகின்றன. ஆனால் அனேக சிக்கலான வழக்குகள் -பயங்கரவாதத்துடன் தொடர்புடையவை உட்பட - கொழும்பில் விசாரணை செய்யப்படுகின்றன. மஜேஸ்ற்றேற் நிலையில் தமிழ் பேசும் நீதிபதிகள் உள்ள போதிலும் 4 உயர் நீதிமன்ற நீதிபதிகளும் ஒரு மேன்முறையீட்டுமன்ற நீதிபதியும் ஓர் உச்ச நீதிமன்ற நீதிபதியுமே தமிழை சரளமாகப் பேசக்கூடிய ஆற்றலுடையவர்கள். தமிழில் ஒரு சில சட்டப்பாட நூல்களும் ஒரேயொரு சட்ட அறிக்கையுமே உள்ளன. அனைத்துச்சட்டங்களையும் ஆங்கிலம் சிங்களம், தமிழ் ஆகிய மொழிகளில் வெளியிட அரசாங்கம் மெதுவாகவே நடவடிக்கை எடுத்துவருகிறது.

ஜூலை மாதத்தில் ஐ நா மனித உரிமைகள் குழு, 1993ல் அரசாங்கத்துக்கும் எல்ரிரிஈக்கும் இடையில் நடந்த முரண்பாட்டின்போது கைது செய்யப்பட்ட நல்லரத்னம் சிங்கராசா என்ற தமிழரின் வழக்கை மீளாய்வு செய்தது. சிங்கராசா தான் சித்திரவதை செய்யப்பட்டதாகவும் தன்னால் வாசிக்க முடியாத ஒரு ஒப்புதல் வாக்குமூலத்தில் கையெழுத்திட நிர்ப்பந்திக்கப்பட்டதாகவும் கூறியிருந்தார். ஐ நா குழு பாரபட்சமற்ற விசாரணைக்குரிய உரிமை அவருக்கு மறுக்கப்பட்டதாகக் கண்டு அவரை ஒன்றில் விடுதலை செய்யவேண்டும அல்லது மறு விசாரணை நடத்தப்படவேண்டும் என்று கோரியது. ஓகஸ்ட் மாதத்தில் அது அரசாங்கத்துக்கு பதிலளிக்க 90 நாள் அவகாசம் வழங்கியது. ஆனால் அரசாங்பம பதிலளிக்கவில்லை. ஆண்டு இறுதியில் சிங்கராசா தொடர்ந்து சிறையில் இருந்தார்.

திருமண வயது, விவாகரத்து, சொத்துப்பங்கீடு என்பன தொடர்பில் பெண்களுக்குப் பாகுபாடு காட்டும் சில சொந்தமுறைச்சட்டங்களின் சில அம்சங்கள், தொடர்ந்து இருந்து வருவதை அரசாங்கம் அனுமதிக்கிறது. (பிரிவு 5ஐப்பார்க்க)

நடப்பு ஆண்டின்போது, எல்ரிரிஈ முன்னர் வடக்கிலும் கிழக்கிலும் அரசாங்கத்தின் நீதி முறைமைக்கு உட்பட்டிருந்த பகுதிகளில் தனது சொந்த நீதிமன்ற முறைமையின்˙ செயற்பாட்டினை விரிவுபடுத்தியது. ஜூலை 28ல் எல்ரிரிஈ ஒரு நீதிமன்ற வளாகத்தை மன்னாரில் திறந்து வைத்தது. அந்த விரிவாக்கலோடு, சகல தமிழ்க்குடிமக்களும் அரசாங்க நீதி முறைமைப்பயன்பாட்டினை நிறுத்தி, எல்ரிரிஈ யின் சட்டமுறைமையில் மட்டுமே தங்கியிருக்கவேண்டுமென எல்ரிரிஈ வற்புறுத்தியது. எல்ரிரிஈ அந்த மாற்றத்தைப் பலாத்காரப்பயமுறுத்தல் மூலமே நடைமுறைப்படுத்தியதாக நம்பகரமான தகவல்கள் உணர்த்தின.

எல்ரிரிஈ குறுகிய சட்டஅறிவு அல்லது சட்டத்துறையில் பயிற்சியெதுவுமற்ற நீதிபதிகளை உள்ளடக்கியதானதும் தன்னளவில் பெருமை பாராட்டிக்கொள்வதுமான தனது சொந்த சட்ட முறைமையைக்கொண்டுள்ளது. எல்ரிரிஈ நீதிமன்றங்கள், தொகுத்தமைக்கப்படாத அல்லது வரையறை செய்யப்படாத சட்டமுறைமையைக் கொண்டதாகவும் ஒரு சுயேச்சையான நீதிமுறைமைக்குப்புறம்பாக யதார்த்தத்தில் எல்ரிரிஈயின் முகவர்களாகவுமே செயற்பட்டுவருகின்றன. ஜூன் மாதத்தில் எல்ரிரிஈ நீதமன்றங்கள் மட்டக்களப்புக்கு அருகே தேசத்துரோகத்துக்காக இருவரை விசாரணை செய்து மரணதண்டனை நிறைவேற்ற உத்தரவிட்டது.

எல்ரிரிஈ அனேக அரசியல் கைதிகளைத் தடுத்து வைத்திருப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. இந்த அமைப்பின் அந்தரங்கத்தன்மை காரணமாக எண்ணிக்கையை நிர்ணயிக்கமுடியாதுள்ளது. இந்தச்சிறைக்கைதிகளைச்சென்று பார்ப்பதற்கு எல்ரிரிஈ, ஐ.சி.ஆர்.சிக்கு அனுமதி மறுத்துள்ளது. (பிரிவு 1 இ வைப்பார்க்க)

**ஊ அந்தரங்கம், குடும்பம், இல்லம் அல்லது கடிதத்தொடர்பு என்பவற்றில் தன்னிச்சையான தலையீடு.**

அந்தரங்கம் பேணுவதற்குள்ள உரிமைக்கு, அரசியலமைப்புச் சட்டம் வகை செய்கிறது. நடைமுறையில் அரசாங்கம் இந்த ஏற்பாட்டை பொதுவில் மதித்தே வருகிறது, எனினும் சில துறைகளில் பிரஜையின் அந்தரங்க உரிமைகளை அது மீறுகிறது. சாதாரண சட்டத்தின் கீழ் ஆட்களைக் கைது செய்வதற்கும், தேடுதல்களை நடத்துவதற்கும், பொலிஸார் பொதுவாகவே உரிய பற்றாணைகளைப் பெற்றுக்கொள்கின்றனர்.

செயற்திறன்மிக்க தகவல் தெரிவிப்போர்களைக்கொண்ட ஒரு வலையமைப்பை வைத்திருப்பதன் மூலம் எல்ரிரிஈ ஓர் ஒழுங்கு முறையாகவே பிரஜைகளின் அந்தரங்க செயற்பாடுகள் மீது எல்லைமீறி தலையீடு செய்து வந்திருக்கிறது. எல்ரிரிஈ அவ்வாண்டின்போது பிள்ளைகளை வலுக்கட்டாயமாக இயக்கத்தில் சேர்த்து வந்திருக்கிறது. (பிரிவு 6 ஈ யைப்பார்க்க). எனினும் நடப்பு ஆண்டின்போது 613 பிள்ளைகளையும் எல்ரிரிஈ விடுதலை செய்துள்ளது. அவர்களில் குறைந்தது 219 பேர் மீண்டும் சேர்த்துக்கொள்ளப்பட்டனர். பிள்ளைகள் - அவர்களில் 8 வயதினரும் இருந்தனர் - எல்ரிரிஈ முகாம்களிலிருந்து தப்பியோடியதாக இடைக்கிடை செய்திகள வெளியாகின. மார்ச் மாதத்தில் எல்ரிரிஈ தரப்பினருக்கிடையே நடந்த சண்டையின் பின் கிழக்கில் இருந்த தமிழர் சிலர் வடக்குக்கும் வடக்கிலிருந்த தமிழர் சிலர் கிழக்குக்கும் இடம் மாற நிர்ப்பந்திக்கப்பட்டனர் . ஆண்டில் பின்னர் அவர்கள் திரும்பிவர அனுமதிக்கப்பட்டனர்.

### எ. உள்வெளிச்சர்ச்சைகளில் அத்து மீறிய வன்முறைப்பிரயோகமும், மனிதாபிமானச்சட்ட மீறல்களும்

குடிமக்களைக் குறிவைப்பது உட்பட எல்ரிரிஈ, வழக்கமாகவே போரில் அளவுக்கதிகமான வன்முறையைப் பயன்படுத்தி வந்துள்ளது. 2001 டிசெம்பரில் சமாதான நடைமுறை ஆரம்பமான பின் எல்ரிரிஈ ஆட்கடத்தல், லொறிகளில் கொண்டுசெல்லப்படும் பொருட்களைக் கொள்ளையிடல், பிள்ளைகள் உட்பட கட்டாயத்தின் பேரில் ஆட்சேர்ப்பு போன்ற செயற்பாடுகளில் ஈடுபட்டு வந்திருக்கிறது. உள்நாட்டில் இடம்பெயர்ந்த ஆடகளுக்கென அனுப்பப்பட்ட உணவு, எரிபொருள் மற்றும் எனைய பொருட்களை எல்ரிரிஈ தனவசப்படுத்தியுள்ளது. இதனால் உயர்ந்த அளவுஅனீமியா, ஊட்டக்குறைவ என்பனவும் குறைந்த பிள்ளைப்பேறும் எல்ரிரிஈயின் பகுதிகளில் உள்ள இடம்பெயர்ந்தோர் மத்தில் ஏற்பட்டது.

கண்ணிவெடிப் பிரச்சனை யாழ்ப்பாணத்திலும் வன்னியிலும் சொற்ப அளவில் கிழக்கிலும் அதி மோசமான பிரச்சனையாக உருவெடுத்திருந்தது (பிரிவு 5ஐப் பார்க்க) .நிலக்கண்ணி வெடி, மிதிவெடி மற்றும் வெடிக்காத வெடிப்பொருட்கள் என்பன இடம்பெயர்ந்த மக்களின் மீள் குடியேற்றத்திற்கும், மீள் நிர்மாணப்பணிகளுக்கும் ஒரு பிரச்சினையாகவே இருந்துள்ளன. 2002ம் ஆண்டின் இறுதியின்போது ஓர் ஐக்கிய நாட்டுக் குழாம், நாட்டின் கண்ணிவெடி புதைக்கப்பட்ட பகுதிகளை வரையறை செய்வதற்கான இணைப்புப்பணிகளைத் தொடங்கி, கண்ணிவெடி அகற்றும் வேலைகளை மேற்பார்வை செய்வதற்கான ஓர் அமைப்பை நிறுவியது. அவ்வாண்டின்போது ஐ.நா.குழுவொன்று நாட்டின் கண்ணிவெடி அகற்றும் பணிகளில் தங்களை ஈடுபடுதிக்கொண்டுள்ள 10 அமைப்புகளினதும் தகவல்களை பங்கீட்டுக்கொள்வதான ஒரு முறைமையில் கண்ணிவெடி புதைக்கப்பட்டுள்ள பகுதிகளை இனங்காட்டும் வரைபடங்கள் அடங்கிய தரவுத்தளமொன்றை அமைத்தது. நடப்பு ஆண்டில் 20 கண்ணிவெடி சாவுகளும் 34 காயமடைந்த சம்பவங்களும் நிகழ்ந்ததாக அரசாங்கம் அறிவித்தது.

## பிரிவு 2 - சிவில் சிறப்புரிமைகளுக்கு மதிப்பளித்தல்: அவற்றில் பின்வருவனவும் அடங்கும்:

### அ. பேச்சுரிமையும் எழுத்துரிமையும்

பேச்சுரிமைக்கும் எழுத்துரிமைக்கும் அரசியலமைப்புச் சட்டம் வகை செய்கிறது. அரசாங்கம் நடைமுறையில் இந்த உரிமைகளுக்கு பொதுவில் மதிப்பளிக்கிறது. கடந்த காலத்தில் சட்டம் அனுமதிக்கும் தேசிய பாதுகாப்புக் காரணங்களைப் பயன்படுத்தி,அரசாங்கம் இந்த உரிமைகளை மட்டுப்படுத்தி வந்திருக்கிறது. 2002ல் சுதந்திர ஊடகங்களின் வெளியீட்டுவாயில்களைப் அரசாங்கத்தினால் பயமுறுத்த அடிக்கடி பயன்படுத்தப்பட்டு வந்த குற்றவியல் அவதூறுச்சட்டங்கள் ஒழிக்கப்பட்டன. தனியார் தொலைக்காட்சி நிலையங்கள் நாட்டில் மறு ஒளிபரப்புச் செய்யப்பட்ட சர்வதேச தொலைக்காட்சிச் செய்திகள் மீது, சுயமாகவே தனிமுறையான விதத்தில் தணிக்கை செய்திருந்தன.

நாட்டின் மிகப்பெரிய செய்தித்தாள் சங்கிலித் தொடரினையும் இரண்டு பெரிய தொலைக்காட்சி நிலையங்களையும் ஒரு வானொலி நிலையத்தையும் அரசாங்கம் சொந்தத்தில் கொண்டிருந்தபோதும் தனியார் பல்வேறு தரப்பட்ட சுயேச்சையான செய்தித்தாள்களையும் சஞ்சிகைகளையும் வானொலி மற்றும் தொலைக்காட்சி நிலையங்களையும் நடத்தி வந்துள்ளன. அனேகமான சுதந்திர ஊடக இல்லங்கள், அரசாங்கத்தையும் அதன் கொள்கைகளையும் சுகந்திரமாக விமர்சித்து வந்தன. புதிய ஊடக அமைப்புகளை

நிறுவுவதில் அரசாங்கம் எந்தவித அரசியல் மட்டுப்பாடுகளையும் விதிக்கவில்லை. ஆயினும் பெப்ரவரியில் ஆசிய ஒலிபரப்பு கூட்டுத்தாபனம் தொடங்க இருந்த தொலைக்காட்சி சேவையின் அனுமதிப் பத்திரத்தை அரசாங்கம் ரத்துச் செய்தது.

முன்னைய ஆண்டுகளில் இருந்தவாறில்லாமல் உள்நாட்டு வெளிநாட்டுப் பத்திரிகையாளர் முரண்பாட்டுப் பிரதேசங்களுக்குச் செல்வதில் மட்டுப்பாடுகள ஏற்படுத்தப்படவில்லை.

ஐரோப்பிய சங்க தேர்தல் அவதானிப்பு குழு தனது இறுதி அறிக்கையில் ஏப்ரல் தேர்தலுக்கு முன்பட்ட காலத்தில் அரசாங்க ஊடகங்கள் ஜனாதிபதியின் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக் சார்பான முறையில் இயங்குவதையும் தேர்தல் வேட்பாளர்களுக்கு சமமான நியாயமான வாய்ப்பு அளிக்கும் கடமையிலிருந்து தவறிவிட்டதையும் சுட்டிக் காட்டியிருந்தது.. மார்ச் 23ல் சர்வதேச பத்திரிகையாளர் சம்மேளனம் ஜனாதிபதிக்கும்  பிரதமருக்கும் அரசாங்கப் பத்திரிகையான சண்டே ஒப்சேர்வர் ஆசிரியர் லக்ஷ்மன் குணசேகர பதவிலிருந்து இடைநீக்கப் செய்யப்பட்டதை ஆட்சேபித்து கடிதம் எழுதியது. சம்மேளனம் அவர் இடைநிறுத்தம் செய்யப்பட்தற்கான காரணம் அவர் எழுதிய ஒரு கட்டுரையே என்றும் கட்டுரையில் அரச பத்திரிகைகள் தேர்தல் காலங்களில நடுநிலை நின்று எழுதவேண்டுமென்று அவர் கூறியிருந்தார என்றும் அது கூறியது. ஆண்டு இறுதியில் குணசேகர பதவியில் மீண்டும் சேர்த்துக் கொள்ளபப்படவில்லை.

மார்ச் 28ல் சண்டே லீடர் என்ற ஆங்கில வாராந்தரியின் கொழும்பு அலுவலகத்துக்குள் பொலீஸார் திடீர் சோதனை நடத்தினர் இப்பத்திரிகை புலனாய்வு செய்திகளுக்குப் பெயர் பெற்றது. எல்லைகள் அற்ற நிருபர்கள் என்ற அமைப்பு பத்திரிகையின ஆசிரியர் லசந்த விகரமதுங்க பொலீஸாரிம் பற்றாணை இருக்கவில்லையெனறு கூறியதாக அறிவித்தது. வாராநதரியைத் துன்புறுத்தும அரசாங்க திட்டத்தின் ஒரு பகுதியே திடீர்சோதனை என்று அவர கூறியதாகவும் அது கூறியது.

மார்ச் 29ல் சுதந்தர தேர்தல் ஆணைக்குழு அரசியல் யாப்பின் 17ம் திருத்தம் அத்தியாயம 27ன கீழ் அரசாங்க வானொலி தொலைக்காட்சி சேவைகளை தேர்தல் முடிவுகள வரை பொறுபடபேற்றுக் கொண்டது.

டிசம்பரில் தினக்குரல் என்ற தமிழ் நாளிதழின் மட்டக்களப்பு அலுவலகம் குண்டுத் தாக்குதலுக்கு இருமுறை இலக்கானது. இனந்தெரியாதோரால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் இருவர் காயமடைந்தனர்.

டிசம்பர 6ல் இனம் தெரியாததோர் யாழ்பாணத்தில் உள்ள MTV/MBC அமைப்புக்கு சொந்தமான வானொலி தொலைக்காட்சி நிலையத்துக்குள் புகுந்து சேதம் விளைவித்தனர் இச்சம்பவத்தல காவலாளி ஒருவர் காயமடைந்தார். கதவுகள சேதமடைந்தன. ஆண்டு இறுதியில மேற்சொன்ன சம்பவங்கள் தொடர்பாக எவரும் கைது செய்யப்படவில்லை.

எல்ரிரிஈ தனது கட்டுப்பாட்டுக்கு உட்பட்ட பகுதிகளில் அச்சு மற்றும் ஒலிபரப்பு ஊடகங்களை இறுக்கமாக மட்டுப்படுத்தியிருந்தது. கொழும்பில் பணியாற்றும் தமிழ் பத்திரிகையாளரை எல்ரிரிஈ பயமுறுத்தியதான செய்திகள் வெளியாகின. அவர்களின் கட்டுப்பாட்டுப் பகுதி நிகழ்வுகளை பத்திரிகையாளர்கள் சுய கட்டுப்பாட்டுடன் எழுதிவருவது பொதுவான வழக்கம்.

மே 31ல் கருணா குழுவுக்கு சாதகமான அணியினர் தமிழ் பத்திரிகையாளர் ஐயாத்துரை நடேசனை மட்டக்களப்பில் கொலை செய்தனர். ஓகஸ்ட் 16ல் எல்ரிரிஈ கொழும்பில வைத்து தமிழ் பத்திரிகையாளரும் ஈபிடிபி அரசியல்வாதியுமான பால நடராஜ ஐயரைக் கொலை செய்தது. மார்ச் ஏப்ரல் மாதங்களில் கருணா குழுவுக்கு சாதகமான எல்ரிரிஈ அணியினர் கிழக்கில் பல தடவைகள் சுதந்திரமான தமிழ் நாளேடான தினக்குரலின் விநியோகத்தை தடுத்தனர் என நம்பகமான செய்திகள் கூறின.

எல்ரிரிஈ, கல்விமான்களின் சுகந்திரத்தை மட்டுப்படுத்தியதோடு அதன் செயற்பாடுகளைக் கண்டித்த புத்திஜீவிகளை ஒடுக்கியது. மனித உரிமைகளுக்கான பல்கலைக்கழக ஆசிரியர்கள் அமைப்பு (யூ.ரி.எச்.ஆர்) மற்றும் ஊடக அறிக்கைகளின்படி மார்ச் 24ல் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் விவசாய பீட பதில் தலைவர் வி திருச்செல்வம் தனது வீட்டில் வைத்து எல்ரிரிஈயால் சுட்டுக் காயப்படுத்தப்பட்டார். அவர் பல ஆண்டுகளாக கிழக்குப பிரதேசத்தின் சூழலையும் கலாச்சார அடையாளத்தையும் பாதுகாக்க உழைத்தாரென யூரிஎச்ஆர் தெரிவித்தது..

#### ஆ. அமைதியான மக்கள் ஒன்றுகூடல் கலத்தல் என்பனவற்றுக்கான சுதந்திரம்

மக்கள் ஒற்றுகூடல், கலத்தல் என்பனவற்றின் சுதந்திரமான இயக்கங்களுக்கு சட்டம் வகை செய்கிறது. அரசாங்கமும் இந்த உரிமைக்கு நடைமுறையில் பொதுவாக மதிப்பளித்து வருகிறது. இருப்பினும் சில மட்டுப்பாடுகள் உள்ளன.

மக்கள் கருத்துக்கணிப்பு ஒன்று இடம்பெறுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் வேலையில் அரசியல்தன்மையுடையதான திரளணிகளும் ஆர்ப்பாட்ட ஊர்வலங்களும் இடம்பெறக் கூடாதென 1981ன் கருத்துக் கணிப்புச்சட்டம் கூறுகிறது. எனினும் அரசாங்கம் எதிர்க்கட்சிகளை மற்றும் சிறுபான்மைக்குழுக்கள் உட்பட ஏனையோர்க்கும் ஆர்ப்பாட்டங்களை நடத்துவதற்குப் பொதுவில் அனுமதி வழங்கி வந்திருக்கிறது.

மே 26ல் கொட்டகலையில் 2,000 பேர் கொண்ட ஆர்ப்பாட்டக்கார் மீது பொலீஸார கண்ணீர் புகைப்பிரயோகம் செய்தனரென மனித உரிமைகளின் உறைவிடம் என்ற என்ஜிஓ கூறியது. சிறீபாத கல்லூரியை முடியமைக்கு எதிராக நடந் இந்த ஆரப்பாட்டத்தில் கலந்துகொண்ட 4பேரை பொலீஸார் தாக்கிதால அவர்கள் காயங்களை ஆற்ற மருத்துவ உதவியை நாடியதாக என்ஜிஓ கூறியது. ஆவர்கள் தாக்கல் செய்த அடிப்படை உரிமைகள் மீறல் வழக்கை உச்ச நீதிமன்றம் விசாரிக்கவில்லை.

எல்ரிரிஈ தன்கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் சுதந்திரமான ஒன்று கூடல்களை அனுமதிப்பதில்லை. ஆனாலும் அது தான் நடத்தும் திரளணிகளில் மக்களைக்கலந்து கொள்ளச்செய்வதற்கு கட்டாயப்படுத்தும் முறையினைக்கையாண்டு வருவதாக கருதப்படுகிறது. ஜூலை 5ல் கரும்புலி நினைவு நாளன்று ஏராளமான பாடசாலைப் பிள்ளைகளைக் கலந்துகொள்ள எல்ரிரிஈ நிர்ப்பந்தப்படுத்தியதாக இலங்கைப் படையினர் ஆட்சேபம் தெரிவித்தனர்.

#### இ. மத சுதந்திரம்

அரசியலமைப்புச்சட்டம் பௌத்த மதத்திற்கு ஒரு முன்னிலை அந்தஸ்தை வழங்கியிருப்பினும் அது ஏனைய மதங்கள் சார்ந்த உறுப்பினர்களுக்கு தத்தமது மதங்களைச் சுகந்திரமாகப் பின்பற்றிவருவதற்கான

உரிமையையும் வழங்குகிறது, அரசாங்கமும் நடைமுறையில் இந்த உரிமைக்கு பொதுவாக மதிப்பளித்தே வருகிறது.

வெளிநாட்டு மதப்பெரியார்கள், இந்த நாட்டில் சேவை செய்யலாம் எனினும் அரசாங்கம் தற்காலிக வேலை அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்ட இத்தகைய வெளிநாட்டு சமயப்பணியாளர்களின் எண்ணிக்கையை மட்டுப்படுத்தவிழைந்தது. அரசாங்கத்துடன் பதிவு செய்யப்பட்டுள்ள மதங்களைச் சார்ந்தோருக்கு மட்டுமே அனுமதி வழங்கப்பட்டது.

நடப்பு ஆண்டின்போது பௌத்தமதக்கும்பல்களால் குறைந்தபட்சம் 30 தாக்குதல் சம்பவங்கள் நடந்தன. தீவிர பௌத்த பிக்குகளின் தலைமையில் புரட்டஸ்தாந்து மற்றும் கத்தோலிக்க தேவாலயங்களையும் அவைசார்ந்தோரையும் அவை தாக்கி வந்ததிற்கான ஆதாரபூர்வமான தகவல்கள் வெளிவந்தன. எனினும் பெப்ரவரியில் 'வோர்ல்ட் விஷன்' என்ற கிறிஸ்தவ என்ஜிஓவின் கெபித்திகொலாவை அலுவலகத்தைத் தாக்கியதாக 3 பௌத்த பிக்குகளும் வேறு நால்வரும் கைது செய்யப்பட்டனர். அவர்கள் மீது தீவைத்தல் குற்றச்சாட்டு கொண்டுவரப்பட்டது. அவர்கள் பிணையில் விடுதலை செய்யப்பட்டனர். ஆண்டு இறுதியில் அவர்கள் தொடர்பிலான விசாரணை தொடர்ந்துகொண்டிருந்தது. கிராமத்துப் பொலிஸார் இத்தகைய தூண்டுதல் செயலில் ஈடுபடும் தீவிர பௌத்த பிக்குகள் மீது அவர்கள் பதவிக்கு காட்டப்படும் மரியாதை காரணமாக நடவடிக்கை எடுக்க அடிக்கடி தயக்கம் காட்டி வந்துள்ளனர். மே மாதத்தில் ஜாதிக ஹெல உரிமைய மெ் பி ஒருவர் பாராளுமன்றத்தில் மதமயற்றத் தடை மசோதா ஒன்றை முறைப்படி கொண்டுவந்து சமர்ப்பித்தார். இந்த மசோதா அரசியல் யாப்புக்கு அனுசரணையானதென்பதை எதிர்த்து பல குழுக்கள் உச்ச நீதிமன்றத்தில் மனுக்கள தாக்கல் செய்துள்ளன. ஓகஸ்ட் மாதத்தில் மசோதாவில் சில பகுதிகள் அரசியலமைப்பு யாப்புக்கு மாறாக இருப்பதாக உச்ச நீதிமன்றம் கண்டது. ஆண்டு இறுதியில் பாராளுமன்ற வாக்கெடுப்புக்கு முன்னதான நீண்டதொரு பாராளுமன்றச் செயற்பாட்டுக்கூடாக மசோதா வரவேண்யிருந்தது. அது சட்டமாகவில்லை.

எல்ரிரிஈ 1990ல் தீவின் வடபகுதியிலிருந்து பெரும்பாலான முஸ்லிம்களை அவர்களின் இல்லங்களிலிருந்து வெளியேற்றினர். இவர்களின் அனேகமானோர் இன்னும் இடம்பெயர்ந்த நிலையிலேயே உள்ளனர். நடப்பு ஆண்டில் எல்ரிரிஈ கிழக்கில் முஸ்லிம்களைத் தொடர்ந்து மிரட்டிக்கொண்டிருந்தது. ஆயினும் பணப்பறிப்பு குறைந்தது. முஸ்லிம்களுக்கெதிரான எல்ரிரிஈ தாக்குதல்கள் மதரீதியானவை அல்ல. சுதந்திர தமிழ்நாடு என்ற குறிக்கோளுக்கு ஆதரவு தராதவர்களை வடக்கு கிழக்கிலிருந்து வெளியேற்றும் ஒரு முழு மூலோபாயத்தின் பகுதியாகவே இது நடைபெற்றதாக தோற்றுகிறது. சில சமரச அறிக்கைகளை எலரிரிஈ வெளியிட்டதாயினும் பெரும்பாலான முஸ்லிம்கள் அவற்றை சந்தேகத்துடனேயே நோக்கினர்.

முன்னைய ஆண்டுகளைப்போல அல்லாமல் சண்டை மூண்டால் தேவாலயங்களிலும் கோவில் வளவுகளிலும் மக்களை ஒன்று சேர்க்க அல்லது வெடிபொருட்களுக்கு கவசமாக அவற்றைப் பாவித்ததாக அறிக்கைகள் வெளிவரவில்லை. விபரமாக இது பற்றி அறிய 2004 சர்வதேச மத சுதந்திர அறிக்மையைப் பார்க்க.

### ஈ. நாட்டிற்குள் சுகந்திரமான நடமாட்டம், வெளிநாட்டுப் பயணம், குடியகல்வு மற்றும் தாயகம் திரும்புதல்

அரசியலமைப்புச்சட்டம் ஒவ்வொரு பிரஜைக்கும் ''சுதந்திரமான நடமாட்டம்'', ''சொந்த இல்லத்தைத்தேர்வதற்கான உரிமை'' ''நாட்டிற்குத்திரும்பி வருவதற்கான சுதந்திரம்'' ஆகியவற்றை

வழங்குகிறது. அரசாங்கம் நடைமுறையில் இந்த உரிமைக்குப்பொதுவில் மதிப்பளித்தது, ஆனால் தமிழர் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தியது. கடந்த காலத்தில் எல்ரிரிஈ யுடனான யுத்தம் காரணமாக அரசாங்கம் வடக்கிலும் கிழக்கிலுமிருந்து வருவோர்போவோர் மீது அதிகடுமையான பரிசோதனை நடத்தவதற்கும், கொழும்பில் நடமாடுவதற்கும் அதிலும் குறிப்பாக இருள்கவிந்த பிறகு நடமாட்டங்களைக் கட்டுப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்தது. நாட்டில் நடமாடுவதற்கு முந்திய ஆண்டுகளைப் போல தமிழர்கள் பொலிஸ் அனுமதிப்பத்திரங்கள் எடுக்கவேண்டியிருக்கவில்லை. ஆயினும் அடிக்கடி அவர்கள் நாடெங்கிலும் பரிசோதனை நிலையங்களில் தொந்தரவுகளுக்கு ஆளாகவேண்டியிருந்தது.

மட்டுப்படுத்தப்பட்ட நடமாட்டங்களை உட்படுத்திய பகுதிகள் தொடர்ந்தும் இராணுவத்தளங்களை மற்றும் உயர் பாதுகாப்பு வலயங்களை அண்மித்திருந்தன. இவை இராணுவம் நிலைகொண்ட பகுதிகள், முகாம்கள், வீரர்களின் விடுதிகள் அல்லது பரிசோதனை நிலையங்கள் என விவரிக்கப்பட்டிருந்தன. இப்பகுதிகளுக்குள் பொதுமக்கள் பிரவேசிக்க முடியாது. பாதுகாப்புவலயங்கள் அளவுக்கு அதிகமான நிலப்பரப்பை உட்படுத்தியிருந்ததாகவும், தமிழர்களின் விவசாய நிலங்களை அநியாயமாக, குறிப்பாக யாழ்ப்பாணத்தில், அது உள்ளடக்கியிருந்தது என்றும் சில நோக்கர்கள் கூறினர். வடக்கில் யாழ்ப்பாணத்தையும் நாட்டின் எஞ்சிய பகுதிகளையும் இணைக்கும் பாதையில் பயணம் செய்வதை எல்ரிரிஈ மட்டுப்படுத்தியிருந்தது.

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஸ்தானிகர் (யூ.என்.எச்.சி.ஆர்), ஒக்டோபர் மாதத்துடன் 377,776 ஐடிபிக்கள் தத்தமது சொந்த இடங்களுக்குத் திரும்பிவிட்டனர் என்றும் நாட்டில் எஞ்சியிருக்கும் அத்தகைய ஐடிபிக்களின் எண்ணிக்கை ஏறத்தாழ 353,624 எனவும் தெரிவித்திருந்தார். அவரின் கருத்துப்படி ஏறத்தாழ 65,000 ஐடிபிக்கள் உயர் பாதுகாப்புவலையம் காரணமாக மீள்குடியேற முடியாதுள்ளனர். இன முரண்பாட்டின் காரணமாக இடம் பெயர்ந்தவரகளுக்கென 295 முகாம்கள் உள்ளன. நடப்பு ஆண்டில் 78,398 ஆட்கள் நலன்புரி நிலையங்களில் இருந்தனர். 275,226 பேர் உறவினருடனும் நண்பர்களுடனும் தங்கியிருந்தனர். ஐடிபி முகாம்களில் பாலியல் துஷ்பியோகம் மோசமாக இருந்ததாக யுஎன்எச்சிஆர் கூறுகிறார். இந்தியாவிலிருந்து 5,633 தமிழ் அகதிகள் நடப்பு ஆண்டில் நாடு திரும்பியதாகவும் அவர் கூறுகிறார். நடப்பு ஆண்டில் 1,500 ஐடிபிகளை வவுனியா, கிளிநொச்சி மாவட்டகளில் உள்ள அரச காணிகளில் குடியேற்றும் திட்டமொன்றை அரசாங்கம் தொடங்கியது.

எல்ரிரிஈ 1990ல் வெளியேற்றிய 46,000 முஸ்லிம்களில் பெரும்பாலானோர் தொடர்ந்து இடம்பெயர்ந்தவர்களாக, நலன்புரி நிலையங்களில் அல்லது அவற்றுக்கு அணித்தாக வாழ்ந்து வருகின்றனர். முன்னைய ஆண்டுகளைப் போல அல்லாமல், எல்ரிரிஈ அவரகளை சொந்த இடங்களுக்கு திரும்பும்படி கேட்டுக் கொண்டது. அவற்களுக்கு ஒரு தீங்கும் நேராது என்றும் உறுதியளித்தது. நடப்பு ஆண்டில் 500 முஸ்லிம் ஐடிபிகள் வீடு திரும்பினராயினும் பெரும்பாலானோர் திரும்பவில்லை. மாறாக அவர்கள் எல்ரிரிஈயின் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசங்களில் தங்களின் பாதுகாப்புக்கு அரசாங்கத்தின் உத்தரவாதத்திற்காகக் காத்திருக்கின்றனர்.

வன்னிப்பிரதேசத்திலிருந்து அமைக்கப்பட்டுள்ள 2 சோதனை நிலையங்களின் கூடாக ஆட்கள் வெளியெறுவதை எல்ரிரிஈ அவ்வப்போது சீர்குலைத்து வருகிறது. எல்ரிரிஈ குறிப்பாக தன்கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளின் கூடாக ப்பயணஞ்செய்யும் குடிமக்களிடமிருந்து வரி அறவிடுகிறது. 1951ன் அகதிகள் அந்தஸ்து தொடர்பிலான ஐ.நா.பொது இணக்க ஒப்பந்தம் அதன் 1967ன் உடன்படிக்கை தீர்வு குறிப்பு என்பவைதரும் விளக்கத்திற்கு உட்படுவோர்க்கு புகலிடம் அத்தோடு அல்லது அகதி அந்தஸ்து வழங்குவதற்குச் சட்டம் வகை செய்யவில்லை. அரசாங்கம் அகதிகளுக்கு பாதுகாப்பு வழங்கும் பொறிமுறை ஒன்றை ஏற்படுத்தவில்லை ஆயினும் நடைமுறையில் அரசாங்கம் யு.என்.எச்.சி.ஆர் உடனும் ஏனைய மனிதாபிமான

அமைப்புகளுக்கும் ஐடிபிக்களுக்கும் அகதிகளுக்கும் உதவி செய்வதில் ஒத்துழைப்பு வழங்கி வருவது குறிப்பிடத்தக்கதாகும். அவ்வாண்டின்போது புகலிட விவகாரங்கள் எதுவும் தலைதூக்கவில்லை. ஒரு நாட்டுக்குத்திருப்பியனுப்பப்பட்டால் தாங்கள் அங்கு அடக்குமுறை அட்டூழியங்களுக்கு ஆளாக நேரிடும் என அஞ்சுவோரை முறைகேடாகவோ அன்றிப் பலாத்காரத்தின் பேரிலோ அனுப்பியதாகத் தகவலில்லை.

## பிரிவு 3 - அரசியல் உரிமைகளுக்கான மதிப்பு தங்களின் அரசாங்கத்தை மாற்றுவதற்கு பிரஜைகளுக்குள்ள உரிமை

அரசியலமைப்புச்சட்டம் பிரஜைகளுக்குத் தங்களின் அரசாங்கத்தை சமாதான முறையில் மாற்றுவதற்கான உரிமையை வழங்குகிறது. பிரஜைகள் இந்த உரிமையை நடைமுறையில் பல கட்சிமுறைமை காலத்துக்காலம் உலகளாவிய வாக்குரிமை அடிப்படையில் சுதந்திரமான நியாயமான தேர்தல்கள் மூலம் பயன்படுத்தி வருகின்றனர், எனினும் சமீபத்தைய தேர்தல்கள் வன்செயல்களாலும் சில ஒழுங்கீனங்களாலும் பாழ்படுத்தப்பட்டிருக்கின்றன. நிறைவேற்று அதிகாரம் ஜனாதிபதிக்கும் (6 ஆண்டுபதவிக் காலத்துக்காக 1999ல் தேர்ந்தெடுக்கப்பட்டவர்) சட்டமியற்றும் அதிகாரம் 225 அங்கத்தவர்களைக்கொண்ட பாராளுமன்றத்துக்கும் வழங்கப்பட்டுள்ளது.

பெப்ரவரி மாதம் ஜனாதிபதி பாராளுமன்றத்தைக் கலைத்து ஏப்ரலில் பொதுத்தேர்தல் ஒன்றை நாடினார். தேர்தலில் அவரின ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்புக்கு 47 சத விகித வாக்கு கிடைத்தது. பாராளுமன்றத்தில் பெரும்பான்மை பெறும் அளவுக்கு கூட்டமைப்பு ஆசனங்களைப் பெறவில்லை ஆனால் பிரதமர் மகிந்த ராஜபக்ஸ தலைமையில் அரசாங்கம் அமைக்க அதனால் முடிந்தது. ஏப்ரல் தேர்தல் பெரும்பாலும் சுதந்திரமானதாகவும் நியாயமானதாகவும் அமைந்தது. ஐரோப்பிய சங்க தேர்தல் கண்காணப்பாளர்கள் தேர்தல் வடக்குக்கிழக்கில் நிகழ்ந்த ஒழுங்கீனங்களைத் தவிர்த்து, ஜனநாயக முறையில் நடந்ததாகக் கூறினர். வுடக்கு கிழக்கில் ஆள்மாறாட்ட, பலமுறை வாக்களித்தல் குழறுபடி என்பன நடந்ததாக கண்காணிப்பாளர்கள் கூறினர். ஒழுங்கீனங்களுக்கு எல்ரிரிஈ பொறுப்பாக இருந்ததாக பல வட்டாரங்கள் கூறின. 2,000த்துக்கு மேற்பட்ட தேர்தல் வன்முறை சம்பவங்கள் நடந்ததாகவும் 5 பேர் மாண்டதாகவும் 15 பேர் வரை காயமடைந்ததாகவும் கண்காணிப்பாளர்கள் கூறினர். 75 சத விகிதமான வர்கள் வாக்களித்தனர். முன்னைய ஆண்டுகளைப்போல அல்லாமல் எல்ரிரிஈ கட்டுப்பாட்டுப் பகுதிகளிலிருந்து வாக்காளர் அரசாங்க கட்டுப்பாட்டுப் பகுதிகளிலுள்ள கோட்ட வாக்களிப்பு நிலயங்களுக்கு வந்து வாக்களிக்க அரசாங்கம் அனுமதி அளித்தது.

ஒக்டோபரில் பாராளுமன்றம் வாக்காளர் வாக்களிக்கும்போது தமது அடையாள அட்டைகளைக் காட்டவேண்டுமென விதிக்கும் மசோதா ஒன்றை நிறைவேற்றியது. வடக்கிலும் கிழக்கிலும் மலையகத்திலும் பல தமிழர்களிடம் அடையாள அட்டை இல்லையென்பதால் அரசாங்கம் ஓராண்டு அவகாசம் வழங்கியுள்ளது. அக்காலத்தில் தேர்தல் அலுவலர்கள் வேறுவித அடையாள முறைகளை ஏற்றுக்கொள்ள அனுமதித்துள்ளது.

நிறைவேற்று கிளையிலும் சட்டமியற்றும் கிளையிலும் ஊழல் காணப்பட்டது. ட்ரான்ஸ்பேரன்சி இன்டர்நஷனல் (ரி இ) அரசாங்க, அரசாங்கத்துக் சொந்தமான அமைப்புகளுக்கு அலுவலர்களை நியமனம் செய்தலில் உறவினருக்கும் நண்பர்களுக்கும் சலுகை காட்டப்பட்டதாக கூறியது. கேள்விப்பத்திர செயற்பாடுகளுக்கும், வணிக முயற்சிகளை ஆரம்பிப்பதற்கும் பெருந்தொகைப் பண ஈடுபாடுகள் கொண்ட ஊழல் பிரச்சினையாக இருந்ததாக அது குறித்துக் கொண்டது. 2003 வரை இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டுக்கள் விசாரணைக்குழு

முழதாக இயங்கவில்லை. ஊழல் குற்றச்சாட்டுக்களில் வழக்குத் தொடரும் முறை கடினமானது என சில வட்டாரங்கள் தெரிவித்தன. ஆண்டு இறுதியில் விசாரணைக்குழுவுக்கு 1,543 முறைப்பாடுகள் வந்து சேர்ந்திருந்தன. அவற்றில 48 நீதிமன்ற விசாரணைக்குரியவையாக இருந்தன. பெரிய இலஞ்ச வழக்கு எதிலும் குற்றம் நிருபிக்கப்படவில்லை.

அரசாங்க தகவல்களைப் பொதுமக்கள் பெறக்கூடியதாக சட்டம் எதுவும் இயற்றப்படவில்லை..
225 ஆசனங்களைக்கொண்ட பாராளுமன்றத்தில் 9 பெண் உறுப்பினர்கள் இடம்பெற்றிருந்தனர். மேலும் அமைச்சரவையில் ஒரு பெண்ணும் உச்ச நீதிமன்றத்தில் இரு பெண்களும் இடம்பெற்றிருந்தனர்.

1999 டிசம்பரில் ஒரு பெண் - சந்திரிகா குமாரதுங்க - ஜனாதிபதியாக ஓர் இரண்டாவது பதவிக்காலத்திற்கெனத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இந்த 225 உறுப்பினர்களைக் கொண்ட பாராளுமன்றத்தில் 28 தமிழர்களும் 26 முஸ்லிம்களும் இடம் பெற்றிருந்தனர். பெண்கள் அல்லது சிறுபான்மையினர் தரப்புக்கு அரசியல் கட்சிகள் குறிப்பிட்ட விகிதத்தையோ அல்லது எண்ணிக்கையையோ ஒதுக்கவேண்டுமென்ற நியதி இல்லை.

தனது கட்டுப்பாட்டின் கீழுள்ள பகுதிகளில் தேர்தல்களை நடத்துவதற்கு எல்ரிரிஈ தொடர்ந்தும் அனுமதி மறுத்துவந்தது. ஏப்ரில் தேர்தலின்போது கிழக்கில் சில தமிழ்க்கட்சிகள் தேர்தல் பிரச்சாரம் செய்வதையும் எதிர்த்தது. நம்பகரமான தகவல்களின்படி கிழக்கில் இரு வேட்பாளர்கள் கொலை செய்யப்பட்டனர். ஒருவர் ஐக்கிய தேசிய முன்னணி வேட்பாளர் எஸ் சுந்தரம்பிள்ளை. மற்றவர் தமிழர் தேசியக் கூட்டணி வேட்பாளர் ஆர் சத்தியமூர்த்தி. வேறு 3 அரசியல் கட்சி ஆதரவாளர்களும் கொல்லப்பட்டனர்.

## பிரிவு 4 - மனித உரிமை மீறல்கள் பற்றி சர்வதேச மற்றும் அரசார்பற்ற அமைப்புகள் விசாரணை நடத்துவது பற்றிய அரசாங்கத்தின் மனப்பான்மைப் பிரதிபலிப்பு.

அரசாங்கத்தின் கட்டுப்பாடுகளின்றி பொதுவாக இயங்கிவரும் பல உள்ஊர் சர்வதேச மனிதஉரிமைக்குழுக்கள் மனித உரிமைகள்கள் வழக்குகள் தொடர்பில் சொந்த முறையில் விசாரணை நடத்தி அவற்றின் பெறுபேறுகளை அறிக்கைகள் வடிவில் வெளியிட்டு வருகின்றன. அரசாங்க அதிகாரிகள் ஒத்துழைப்பு வழங்குவதுடன் அவர்களின் கருத்துக்கள் தொடர்பில் ஆக்கபூர்வமான செயற்பாடுகளிலும் ஈடுபட்டுவருகின்றனர். மனித உரிமை முகாமைத்துவங்களின் இணையம் மனித உரிமைகளுக்கான யாழ்ப்பாண பல்கலைக்கழக ஆசிரியர்கள் அமைப்பு, சிவில் உரிமைகள் இயக்கம், சட்ட சமூக நம்பிக்கை அமைப்பு உட்பட உள்ஊரில் இயங்கும் அனேக மனித உரிமைகள் சம்பந்தப்பட்ட என்.ஜி.ஓக்கள் சிவில் மற்றும் அரசியல் சுதந்திரங்கள் பற்றிக் கண்காணித்து வருகின்றன. பதிவு செய்யும் நடைமுறையின் ஒரு பகுதியாக என்.ஜி.ஓக்கள் தங்களின் செயற் திட்டங்களை உட்படுத்துவதோடு நிதி வழங்கும் வட்டாரங்கள் பற்றிய விரிவான விளக்கங்களையும் பதிவு செய்யும்போதும் அதன் பின் ஒவ்வொரு ஐந்தாண்னுகளுக்கும் ஒரு தடவை தர வேண்டுமென அரசாங்கம் உத்தியோக பூர்வமாகக் கேட்பினும் உள்ஊர் மற்றும் வெளிநாட்டு என்.ஜி.ஓக்களின் செயற்பாடுகள் மீது பாதிப்பு ஏற்படுத்தக் கூடியதான எந்த நிபந்தனைகளும் விதிக்கப்படவில்லை. முன்னைய மனிதஉரிமைகள் குழுக்களின் விமர்சனங்களைத் தொடர்ந்து என்.ஜி.ஓ துறை மீது கூடுதலான அளவு கட்டுப்பாட்டினைப் பிரயோகிப்பதற்கான அரசாங்கத்தின் முயற்சி இதுவென சில என்.ஜி.ஓ பணியாளர்கள் இதனை நோக்குகின்றனர். இத்தகைய தகவல் தெரிவிப்புத் தேவைகளை பெரும்பாலான என்.ஜி.ஓக்கள் பூர்த்தி செய்கின்றன.

மார்ச் 29ல் அரசாங்கம் சித்திரவதைக்கு எதிரான மகாநாட்டின் கீழ் அதற்குள்ள அறிவித்தல் கடப்பாடுகளுக்கு இணங்க யுஎன்எச்ஆர்சி க்கு அறிக்கை ஒன்றைக் கையளித்தது. நடப்பாண்டில் ஐநா அதனை மதிப்பாய்வு செய்யவில்லை. அது தொடர்நது ஒர் இரகசிய ஆவணமாக இருக்கிறது.

செப்டம்பர் மாதத்தில் ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழு, அரசாங்கம் சித்திரவதைக்கெதிரான கிறிஸ்தவர்கள் செயற்பாடு என்ற ஜெர்மன் என் ஜி ஒவுக்கு எழுதிய ஒரு கடிதத்தில் ஆணைக்குழுவின பெயரைக் கெடுக்க முயன்றதாக குற்றஞ்சாட்டியது. அதாவது ஆணைக்குழு அரசாங்கத்துக்கெதிராக அவதுாறுப்பிரச்சாரம் செய்வதாக தான் குற்றம் சுமத்தப்படுவதாக அது கூறியது.

தடுப்பு நிலையங்களுக்கு ஐ.சி.ஆர்.சி எந்த கட்டுப்பாடுமற்றுச் சென்றுவருவதற்கு அரசாங்கம் தொடர்ந்து அனுமதியளித்து வருகிறது. (பிரிவுகள் 1இ, 1ஈ யைப் பார்க்க) ஐ.சி.ஆர்.சி பாதுகாப்புப்படைகளுக்கு சர்வதேச மனித உரிமைகள் சட்ட விவகாரம் தொடர்பில் பயிற்சி நெறிக்கான சாதனங்களை வழங்குவதுடன் உரிய பயிற்சிகளையும் வழங்குகிறது. நடப்பாண்டில் ஐ.சி.ஆர்.சி வடக்குக்கிழக்கில் உள்ள எல்ரிரிஈ கட்டுப்பாட்டு பகுதிகளில் சுகாதார கல்வி நிகழ்ச்சித் திட்டங்களை வழங்கியது. (பிரிவு 1ஊ வைப்பார்க்க)

எச்.ஆர்.சி சட்டம் வழங்கும் பாரிய அதிகாரங்களையும் வளங்களையும் கொண்டுள்ளது. எந்த ஒரு நீதிமன்றத்திலும் சாட்சியளிக்கவோ அல்லது அதன் உத்தியோகபூர்வ கடமைகள் தொடர்பில் அதன் மீது வழக்குத் தொடரப்படவோ முடியாத விதத்தில் அதன் அதிகாரங்கள் இறுக்கமாக உள்ளன. எனினும் பல அனித உரிமைகள் அமைப்புகளின் கூற்றுப்படி அது வினைத்திறனுடன் இயங்க வேண்டிய அளவுக்கு செயற்பாடு இல்லாதுள்ளது. 6,720 முறைப்பாடுகள் விசாரிக்கப்படவேண்டிய நிலையில் எச்.சி.ஆர் போதிய பணியாளரையோ வளங்களையோ கொண்டிருக்கவில்லை. அது ஒரு தீர்ப்பு மன்ற ரீதியிலான ஒரு போக்கைக் கடைப்பிடிக்கிறது. குற்றவியல் விசாரணையாளராக பூர்வாங்க விசாரணைகளை மேற்கொள்ள அது மறுத்துவருகிறது மனித உரிமைகள் துஷ்பிரயோகங்கள் தொடர்பில் எச்.சி.ஆர் 2003க்கான ஆண்டறிக்கையொன்றை வெளியிட்டது. ஜுன் மாதத்தில் அது சித்தரவதைத் தடுப்பு கண்காணிப்பு பிரிவு ஒன்றை தனது தலைமை அலுவலகத்திலும். 3 பிரதேச அலுவலகங்களிலும் திறந்து வைத்தது. சித்திரவதைகளுக்கு பூஜ்ய சகிப்புத்தன்மை என்ற தனது கொள்கையை நிறைவேற்றவே இந்தப் பிரிவு. தன்னை நிலைநிறுத்தும் முயற்சியில் சித்திரவதை தடுப்புக் கண்காணிப்பு பிரிவுக்கான செலவை பொறுப்பேற்குமாறு திறைசேரியைக் கேட்டுக்கொண்டது. நடப்பாண்டில் எச்ஆர்சியின் விசாரணைகளில் தலையீடுகள் செய்யப்பட்டன. களுத்துறை மாவட்டத்தில உள்ள பயாகலை பொலீஸ் நிலையத்தில வைத்து சித்திரவதை முறைப்பாடு ஒன்றை விசாரித்த எச் ஆர் சி அலுவலர்கள் பொலீசாரால் துன்புறுத்தப்பட்டு மிரட்டப்பட்டார்கள். செப்டமபர 27ல் எச்ஆர்சி அலுவலர் றுவன் சந்திரசேகர யாழ்ப்பாண பொலீநிலயத்தில் முறைப்பாடு ஒன்று பற்றி வசாரிகையில் ஒரு பொலீகால் தாக்கப்பட்டார் (பிரிவு 1இ யும் ஈ யும்)

ஜுலை மாதத்தில் எல்ரிரிஈ மனித உரிமைகளுக்கான வடக்குக்கிழக்கு செயலகத்தைத் திறந்தது. ஆண்டு இறுதியில் அதன் கடமைகள் விதிமுறைகள் பூர்த்தியாக்கப்பட்டு அதற்கு செய்யபட்ட முறைப்பாடுகள் சிலவற்றை விசாரிக்க ஆரம்பித்தது.

## பிரிவு 5 - பாகுபாடு, சமூகத்தின் பல்வேறு பிரிவினர் துஷ்பிரயோகம், ஆட்களை சட்டவிரோதமாகக் கொண்டுசெல்லல்

அரசியலமைப்பு, அச்சட்டத்தின் கீழ் சகல பிரஜைகளுக்கும் சம உரிமைகளை வழங்குகிறது. அரசாங்கம் பொதுவில் இவற்றை மதித்து நடக்கிறது. ஆயினும் பால்முறை பாகுபாடு காட்டப்படும் நிகழ்வுகள் ஏற்பட்டுள்ளன. நீதிமன்றத்தக்கு செல்லும் உரிமைக்கு மேலதிகமாக அரசியல் அமைப்புச் சட்ட ஏற்பாடுகள் அமுல் நடத்தப்படுவதை உறுதி செய்வதற்கான ஏற்பாடாக அரசாங்கம் எச்.ஆர்.சியை அமைத்துள்ளது (பிரிவு 1 ஈ யைப்பார்க்க).

**பெண்கள்**

பாலியல் தாக்குதல், வல்லுறவு, வாழ்க்கைத்துணையைத் துன்புறுத்துதல் (இது அடிக்கடி மதுபாவனையுடன் தொடர்புபட்டிருக்கிறது) என்பன தொடர்ந்தும் மோசமானதும் தகாவழிச்செல்கிற வகையிலானதுமான பிரச்சினைகளாகவே இருந்துவருகின்றன. 1995ல் குற்றவியல் சட்டத்திற்கு கொண்டுவரப்பட்ட திருத்தங்கள் பால்ரீதியான துஷ்பிரயோகம் மற்றும் தவறான நடத்தை தொடர்பிலான விவகாரங்கள் விடயத்திற்கு பிரதானமாக கவனம் செலுத்துவதோடு ஆதாரங்கள்விடயத்தில் அதி சம அளவில் நிலைப்படுத்தலை உருவாக்கும் விதத்திலும் தண்டனைகளை மிகவும் கடுமையாக்குவதற்காகவும் வன்புணர்ச்சிச்சட்டம் திருத்தப்பட்டுள்ளது. நீதிவழியில் பிரிந்திருக்கும் வாழ்க்கைத்துணை மீது மேற்கொள்ளா்டும் மணமுறை வல்லுறவு மற்றும் வேலைத்தளங்களில் மேற்கொள்ளப்படும் பாலியல் நச்சரிப்பு மற்றும் தொல்லை என்பனவும் குற்றச்செயலாக கணிக்கப்படும் வழக்கத்தில் சட்டம் திருத்தப்பட்டிருக்கிறது. பாலியல் ரீதியில் பாதிப்புக்குள்ளாகும் பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை சிலவற்றைக் குற்றவியல்சட்டக்கோவை குறைக்கும் என்றாலும் பொலிஸாரையும் நீதித்துறை அதிகாரிகளையும் இவ்விடயத்தில் கூடுதலான உணர்வுநிலைக்கு உட்படுத்துவது அவசியமாகும் என அனேக மாதர் அமைப்புகள் நம்புகின்றன. பொலிஸின் கட்டமைப்புக்குள் பிள்ளைகளையும் பெண்களையும் பாதுகாப்பதற்கென மேலும் அதிகமான அக்கறையையும் கவன ஈர்ப்பையும் ஏற்படுத்தும் நோக்கில் அரசாங்கம் 1994ல் அதற்கான பணியகமொன்றை நிறுவியது. நுடப்பாண்டில் இபணியகத்துக்கு 1,190 பெண்களுக்கெதிரான வன்முறை முறைப்பாடுகள் வந்தன.

கடந்த ஆண்டைப்போல அல்லாது பாதுகாப்பு படையினர் வன்புணர்ச்சியில் ஈடுபட்டதாகவோ அனறி எத்தனித்ததாகவோ நிகழ்வுகள் அறிவிக்கப்படவில்லை. ஆண்டு இறுதியில் மன்னார் மாவட்ட உயிலங்குளத்தில் திருமதி செல்வராஜன் என்பவர் மீது இரண்டு பொலீஸார் வல்லுறவு கொள்ள எத்தனித்ததாக 2003 ஒக்டோபரில் கொண்டுவரப்பட்ட குற்றச்சாட்டு முடிவுறாத நிலையில் இருந்தது. யாழ்ப்பாணக்குடா நாட்டில் வடமராட்சியில் வைத்து ஓகஸ்ட் 2003 ல் ஒரு பெண் மீது வல்லுறவு முயற்சி மேற்கொள்ளப்பட்ட மூன்று படையினர் சம்பந்தப்பட்ட வழக்கு தாக்கல் செய்யப்படவில்லை. நடப்பாண்டில் 928 வல்லுறவு சம்பவங்கள் விசாரிக்கப்படுவதாக பொலீஸார் தெரிவித்தனர் முந்திய ஆண்டில எண்ணிக்கை 900 ஆக இருந்ததாய்ப் பொலிஸார் அறிவித்தனர். வல்லுறவு குடும்ப வன்முறை ஆகியவற்றுக்கான நெருக்கடி நிலையங்கள் சட்ட உதவி ஆலோசனை முதலிய சேவைகள் மட்டுப்படுத்தப்படிருந்தன.

விபச்சாரம் சட்டபூர்வமானதல்ல. அது ஒரு பிரச்சினையே. பொலிஸ் மற்றும் பாதுகாப்புப்படை உறுப்பினர்கள் சிலர் அதில் ஈடுபட்டிருப்பதாகவும் விபச்சார செயற்பாட்டுகளை ஆதரித்ததாகவும் அறிவிக்கப்பட்டிருந்தது. 1995ல் விபச்சாரத்துக்கு ஆட்களை பெறுவது கடத்துவது ஆகியவற்றுக்கு எதிரான சட்டங்கள்

வலுப்படுத்தப்பட்ட போதிலும்கட்டாய வேலைக்கு பெண்களை கடத்தும் நிகழ்வுகள் அறிவிக்கப்பட்டன. (பிரிவு 5ஐப் பார்க்க கடத்தல்)

பாலியல் துன்புறுத்தல் அதிக பட்சம் 5 ஆண்டு சிறைத்தண்டனையுடன் கூடிய குற்றவியல் குற்றமாகும்.. ஆனால் இச்சட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

அரசாங்கத்துறையில் சம வேலைவாய்ப்பு வழங்கப்படுவதற்கு அரசியலமைப்புச்சட்டம் வகை செய்கிறது எனினும் தனியார் துறையில் பாகுபாடுகாட்டப்படுவதற்கு எதிராகப் பெண்களுக்குச் சட்டப்பாதுகாப்பு இல்லை. சமவேலைக்கு சில சமயம் அவர்களுக்கு அங்கு ஆண்களைவிடக் குறைவான சம்பளமே வழங்கப்படுகிறது. மேற்பார்வை நிலைகளுக்கு உயர்வதில் அவர்கள் அடிக்கடி கஷ்டத்தை எதிர் கொள்கின்றனர். அத்தோடு அவர்கள் பால்ரீதியிலான இன்னல்களையும் எதிர் நோக்க வேண்டியுள்ளது. முறையான தொழில் ஆளணியில் ஏறத்தாழ அரைப்பங்கினர் பெண்கள். ஆசிய அபிவிருத்தி வங்கியின் கூற்றுப்படி ஆண்களைவிட பேணகளுக்கு கிடைக்கும் தொழிலகளின் தரம் குறைந்ததாக உள்ளது. ஏனெனில் முறைசார் தொழிலிலும் முறைசாரா தொழிலிலும் பெண்களுக்கு ஊதியம் குறைந்த, திறன் குறைந்த துறைகளிலேயே கிராக்கி உண்டு டிசம்பர மாதத்தில் யுஎன்எச்சிஆர் ஊடக பிரச்சாரம் ஒன்றை வேலைத்தலத்தில் துன்புறுத்தல் உட்பட பாலியல் வன்முறை, பெண்களுக்கும் பிள்ளைகளுக்கும் எதிரான வன்முறை, குடும்பத்தில் துஷ்பிரயோகம் என்பன பற்றி விழிப்புணர்ச்சி ஏற்படுத்துவதறடகாக நடத்தியது. தேசிய சிவில் மற்றும் குற்றவியல் சட்டம் என்பனவற்றின் கீழ் பெண்கள் சமஉரிமையுடையவர்கள் எனினும் விவகாரத்து பிள்ளையின் பராமரிப்பு, சொத்துரிமை உட்பட குடும்பச்சட்டம் தொடர்பிலான விவகாரங்கள் ஒவ்வோர் இன அல்லது மத சம்பிரதாயச் சட்டத் தீர்ப்புக்கு உட்பட்டதாக அமைந்துள்ளன. பெண்களின் மிகக்குறைந்த திருமனவயது 18 ஆகும். ஆனால் முஸ்லிம்களைப் பொறுத்தவரை அவர்கள் தங்களின் சம்பிரதாய திருமண நடைமுறைகளேயே பின்பற்றிவருகின்றனர். சட்டம் பெண்களின் வாரிசு உரிமைகளை தாபிக்காதவகையில் அரசாங்க ஆதரவுடனான குடியேற்றத் திட்டங்களில் அவரகளது காணி உரிமைகள் ஆண்களது உரிமைகளுக்குச் சமனாக இல்லை. வெவ்வேறான சமய மற்றும் இன நடைமுறைகள் பாகுபாடுகாட்டுதல் உட்பட பெண்களை நடத்துவதில் சமசீரற்ற நிலைமையை அடிக்கடி உருவாக்கிவந்துள்ளது.

**பிள்ளைகள்**

கட்டாயக் கல்விச் சட்டம் 5க்கும் 14ற்கும் இடைப்பட்ட வயதுடைய சிறுவர்கள் பாடசாலையில் கற்பதை அவசியப்படுதுகிறது. 16 வயதுக்குட்பட்ட 85 சதவிகிதமான பிள்ளைகள்,பாடசாலைகளில் கல்வி கற்று வருகின்றனர். கல்வி பல்கலைக்கழக மட்டம்வரைக்கும் இலவசமே. நோய்த் தடுப்பு உட்பட சுகாதாரக் கவனிப்பு அனைத்துங் கூட இலவசமாகவே கிடைக்கின்றன. பிள்ளைகளைச் சுரண்டிப்பிழைக்கும் பிரச்சினைக்கு போதுமான சட்டமின்மைக்கு மாறாக சட்டத்தினை நடைமுறைப்படுத்துவதிலுள்ள குறைபாடே காரணம் என அனேக என்.ஜி.ஓக்கள் கருதுகின்றன. பிள்ளைகள், பெண்களின் பாதுகாப்புக்கான பொலிஸ் பணியகம் பிள்ளைகளுக்கும் பெண்களுக்கும் எதிரான குற்றவியல் செயற்பாடுகளையிட்டு விசாரணைகளை நடத்தியிருப்பினும் சட்ட அமுலாக்கல் வளங்கள் பல எல்ரிரிஈ யுடனான பிணக்குத் தொடர்பில் திசை திருப்பப்பட்டன .2002 செட்டம்பரில் பொலிஸால் சிறார் விவகாரங்கள் தொடர்பிலான தேசிய சிறார் பாதுகாப்பு அதிகாரசபையுடன் (என்.சி.பி.ஏ) நேரடியாகத் தொழிற்படுவதற்காய் ஓர் அலுவலகத்தைத்திறந்தனர். பிள்ளைகளுக்கெதிரான குற்றவியல் சம்பவங்களையிட்டு விசாரித்துவரும் என்.சி.பி.ஏ யிற்கு ஆதரவாகவும், அந்த விசாரணையின் அடிப்படையில் சந்தேக நபர்களைக் கைது செய்வதற்குமாக அது

அமைக்கப்பட்டதாகும். சட்டத்தின் கீழ் பிள்ளையைத் தவறாக பயன்படுத்துவதற்கான விளக்கம், அவர்களுக்கு எதிரான பாலியல் வன்முறை ,அவர்களை அந்த இழிசெயலில் ஈடுபடுத்துவது ,சிறுவர்களைக்கொடுமைப்படுத்தல் உட்பட அத்தகைய செயற்பாடுகள் அனைத்தையும் உள்ளடக்கிறது. பிள்ளைகளை ஏய்த்துப்பிழைக்கும் விதத்தில் தொழில்களில் ஈடுபடுத்துவது, அல்லது சட்டவிரோதமான செயற்பாடுகள் அல்லது கட்டாய கல்வி விதிமுறைகளுகளுக்கு மாறான எந்த ஒரு செயலிலும் ஈடுபடுவது என்பனவற்றையும் சட்டம் தடைசெய்கிறது. பிள்ளைகளைப் போரில் ஈடுபடுத்துவதை உள்ளடக்கும் விதத்தில் அது சிறார் துஷ்பிரயோகம் என்பதற்கான விளக்கத்தையும் விரிவுபடுத்துகிறது. என்.சி.பி.ஏ, கல்வி, மருத்துவ, ஒய்வு பெற்ற பொலிஸ் மற்றும் சட்ட வாழ்க்கைத் தொழிலர் பிரதிநிதிகளை உள்ளடக்கியிருந்தது, அது ஜனாதிபதிக்கே நேரடியாகவே தகவல் தெரிவித்து வந்தது. நடப்பு ஆண்டில் சிறுவர் பெண்களைப் பாதுகாக்கும் பணியகத்துக்கு பிள்ளைகளுக்கெதிரான வன்முறைக் குற்றச்சாட்டுகள் 1,841 கிடைத்தன.

சிறுவர்களைப் பாலியல் துஷ்பிரயோகங்களுக்கு உட்படுத்தும் குற்றவாளிகளை நீதியின் முன் நிறுத்துவதில், சர்வதேச அளவில் கூடுதலான ஒத்துழைப்பை அரசாங்கம் நாடிச் செயற்பட்டு வந்தது. அத்தகையோர்க்கான தண்டனை 5 ஆண்டுகளுக்குக் குறையாததும் 20 ஆண்டுகள் வரையிலுமான சிறைத்தண்டனையோடு தொகை குறிப்பிடத்படாத அபராதமாகும். நடப்பு ஆண்டின்போது அத்தகையோர் தொடர்பிலான 39 வழக்குகள் நீதி மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

சிறுவர் விபச்சாரம் சில கரையோர உல்லாசப் பயணப்பகுதிகளில் ஒரு பிரச்சினையாகவே இருந்துள்ளது. நாட்டில் 2000க்குக் கூடுதலான சிறார் விபச்சாரர்கள் உள்ளதாக அரசாங்கம் மதிப்பிட்டது. ஆனால் தனியார் குழுக்கள் அந்த எண்ணிக்கை அதைவிடக் கூடுதலானதாக 6,000 என மதிப்பிடுகின்றன(பிரிவு 6 ஊ வைப்பார்க்க) பிரஜைகளே சிறார் விபசாரம் மாதிரியில் அதிகமான சிறார் பாலியல் துஷ்பிரயோகங்களில் ஈடுபட்டுவருகின்றனர். எவ்வாறாயினும் சில சிறார் விபச்சாரர்கள் சிறுவர்கள்,

அவர்கள் வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகளின் தேவைகளைப்பூர்த்தி செய்து வருகின்றனர். இச்சிறார்களில் சிலர் விபச்சாரத்தில் கட்டாயத்தின் பேரில் ஈடுபடுத்தப்படுகின்றனர். (பிரிவு 5 ஊ வைப் பார்க்க) . சிறார் நன்நடத்தை பராமரிப்புச் சேவைகள் திணைக்களம், இழிவழியில் பாலியல் ரீதியில் துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாகிப் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்குப் பாதுகாப்பு அளித்து அவர்களுக்குப் புகலிடவசதிகளை வழங்கும் உள்ஊர் என் ஜி.ஓக்களுடன் இணைந்து பணியாற்றியும் வருகிறது. பாலியல் உல்லாசப் பிராயண அபாயத்திற்கு உட்படக் கூடிய கவர்ச்சிப் பிரதேசங்களில் அந்த அநியாயத்திற்கு உட்படக்கூடிய சிறுவர்களுக்கு உல்லாசப்பயனப் பணியகம் கவன ஈர்ப்பு நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்து வந்திருக்கிறது.

எல்ரிரிஈ போர்க்களத்தில் ஆதாரப் பணிகளுக்கும் சண்டையில் ஈடுபடுத்துவதற்குமாக சிறார் படைவீரர்களைப் பயன்படுத்தினர். எல்ரிரிஈ தமது படைகளில் சேர்த்தோரில் 13 வயதினரும் கூட இடம்பெற்றிருந்தனர். அவர்களில் சிலர் இராணுவத்திடம் சரணடைந்தனர். படைக்கு ஆட்களைத்திரட்டும் முயற்சிகளை எல்ரிரிஈ குறிப்பாகக் கிழக்கில் அதிகரித்ததாக நம்பகத் தகவல்கள் உணர்த்தின (பிரிவு 1 எ யைப் பார்க்க). . அத்தோடு போர்நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்ட பிறகுங் கூட எல்ரிரிஈ கட்டாயத்தின்பேரில் பிள்ளைகளைப் படையணியில் சேர்த்துவந்ததாக நம்பகரமான பல அறிக்கைகள் வெளிவந்தன. (பிரிவு 6ஈ யைப்பார்க்க) நடப்பாண்டின்போது எல்ரிரிஈ பலாத்காரமாக பிள்ளைகளைச் சேர்த்ததாகவும் 1,000 க்கும் மேற்பட்ட நேர்வுகள் இடம் பெற்றதாகவும 5,000 பிள்ளைகள் எல்ரிரிஈ வசம் ஆண்டு இறுதியில் இருந்ததாகவும் நம்பக வட்டாரங்கள் அறிவித்தன. 2003ல் எல்ரிரிஈயும் யுனிசெவ்வும் பிள்ளைப் போராளிகளை அணிகலைத்து மறுவாழ்வு அளிக்கும் திட்டம் ஒன்றில் இணங்கினர் அடுத்து சிறுவரைத் தொழிலில் அமர்த்தல் வுயது

முறைந்த ஆட்சேர்ப்பு என்பன போனற பிரசிசனைகளை ஆராயும் செயற்திட்டத்தில ஈடுபட்டனர். பல வட்டாரங்கள் செயற்திட்டம் எல்ரிரிஈ தடைகளால் முன்னேற்றம் காணமுடியவில்லை என அறிவித்தன. சிரேஷ்ட எல்ரிரிஈ யினர் சிறுவர் போர்வீரர்கள் தொண்டர்களென வெளிநாட்டு அதிகாரிகுளக்குத் தெரிவித்தனர்

**மறைமுக கொண்டுசெல்லல**

ஆட்களை மறைமுகமாகக் கொண்டுசெல்லலை சட்டம் தடைசெய்கிறது. ஆனால் அவ்வாறு இங்கிருந்து கொண்டுசெல்லப்படும் இடமாகவும் வெளியில் இருந்து கொண்டுவரப்படும் இடமாகவும் நாடு இருந்துள்ளது. பாதிக்கப்பட்டவரகள் குறிப்பாக பெண்களும் சிறுவர்களுமாவார். கட்டாய வேலைக்கும் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு மாக அவர்கள் கொண்டுசெல்லப்பட்டுள்ளனர். லெபனன், சவுதி அராபியா, குவெய்த், ஐக்கிய அரபு எமிரேட்ஸ், பாரெயின், கட்டார் ஆகிய நாடுகளுக்கு கட்டாய வேலைக்கும் பாலியல் துஷ்பிரயோகத்துக்கும் ஆட்கள் சேர்க்கப்படும் இடமாக நாடு இருந்துள்ளது. தாய்லாந்து, சீனா, ரஷ்ய பெண்கள் நாட்டுக்குள் சொற்ப எண்ணிக்கையில் பாலியல் வணிகத்துக்காக கொண்டுவரப்பட்டுள்ளனர். உள்நாட்டில் பெண்களும் பிள்ளைகளும் வீட்டு பாலியல் அடிமை வேலைக்காக இடமாற்றப்பட்டுள்ளனர். சுற்றுலாத்துறையில் சிறுவர்களும் சிறுமிகளும் வணிக பாலியல் நோக்கங்களுக்காகப் பலியாட்களாக்கப்பட்டுள்ளனர்.

பெண்களை மறைமுகமாகக் கொண்டுசெல்லலுக்கு சட்டரீதியான தண்டனை 2 முதல 20 ஆண்டுகள் வரையிலாள சிறையும் தெண்டமும். சிறுவரகள் விடயத்தில் 5 முதல் 20 ஆண்டுகள் வரை சிறையும் தெண்டமும்

2003ல் கணனிமுறை குடிவரவு குடியகல்வு திட்டமொன்று தோற்றுவிக்கப்பட்டதன் மேல் மறைமுக கொண்டுசெல்லுலக்கு எதிரான சட்டநடைமுறை வலுவடைந்தது. இம்முறையின்படி அலுவலர்கள எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டது. சந்தேக நபர்களது விபரங்கள் குறிக்கப்பட்டு, அவரகளை விசாரிப்பது இலகுவாக்கபட்டது. அதனால் அவரகள் நாட்டைவிட்டு வெளியேறாது தடுக்கப்பட்டனர். என்சிபிஎ சைபர் வாட்ச் செயற்திட்டம் ஒன்றை ஆரம்பித்தது. இதன் மூலம் சந்தேகத்துக்கிடமான இணையதள அளவளாவல் அறைகள் கண்காணிககப்பட்டன. இந்த கண்காணிப்பில் திரட்டப்பட்ட தகவல்களைக் கொண்டு பல கைதுகள் சாத்தியமாயிற்று குற்றவாளியாகக் காணப்பட்டவர்க்கு ஓராண்டு கடுழிய சிறையும் 1,000 டொலர் (100,000 ருபா) தெண்டமும் விதிக்கப்பட்டது. சிறுவர்கள் உள்நாட்டில் மறைமுகமாக் கொண்டு செயலப்பட்டது ஒரு பிரச்சினையாக இருந்தது. குறிப்பாக வடக்கு கிழக்கின் எல்லைப் பகுதிகளிலிருந்து. ‘சூழலையும் சிறுவர்களையும் எங்கும் பாதுகாக்கும்‘ உள்நாட்:டு என்ஜிஒ, 8 வயதுக்கும் 16 வயதுக்கும் இடைப்பட்ட 6,000 ஆண் பிள்ளைகள் கடற்கரை மற்றும் மலைநாட்டு வீடுதிகளில் பாலியல் உழைப்பாளராக இருப்பதாக மதிப்பிடுகிறது. இப்பிள்ளைகளில் சிலரை பெற்றோர் அல்லது சட்டவிரோதக் கும்பல்கள் கட்டாயப்படுத்திச் சேர்த்திருக்கிறார்கள்.

என்சிபிஏ சர்வதேச தொழில் நிறுவனத்தின் உதவியுடன் சிறுவர்களைச் சுரண்டுவதற்காய் மறைமுக கொணடுசெல்லலை தடுக்க தேசிய திட்டமொன்றை உருவாக்கியுள்ளது. 2002ல் பொலீஸார் என்சிபிஏ உடன் சிறுவர் பிரச்சிகைளில் இணைந்து செயலாற்ற ஆரம்பித்தது. பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்காக மறுவாழ்வு நிலையங்களை அரசாங்கம் ஏற்படுத்தி மறைமுக கொணடடுசெல்லல் பற்றி பெணகளுக்கு விழிப்புணர்வு அமர்வுகளை நடத்தியது. இவற்றை உள்நாட்டு வெளிநாட்டு என்ஜிஒகள் வெளிநாட்டு வேலைவாயப்புகள பணியகத்தின் உதவியுடன் நடத்தின.

**வலுக்குறைந்தோர்**

வலுக்குறைவின் காரணமாக எந்த ஒரு ஆளுக்கெதிராகவும் வேற்றுமை காட்டப்படுவதைச் சட்டம் தடைசெய்கிறது. அச்சட்டத்தின் கீழ் எந்தவொரு வழக்கும் தொடரப்படவில்லை என நம்பப்படுகிறது எனினும் வேலைவாய்ப்பு கல்வி அல்லது வேறு அரசாங்கத்துறைச் சேவைகளில் வலுக்குறைந்தோர்க்கெதிராக ஒரளவு வேற்றுமை காட்டப்பட்டே வந்திருக்கிறது. வலுக்குறைந்த ஆட்கள் கட்டிடங்களுக்குச் சென்று வேலைபார்ப்பதைச் சட்டம் தடுக்கவில்லை. உடல் -மனோரீதியாக வலுக்குறைந்தோர்க்காக சமூகசேவைகள் திணைக்களம் எட்டு தொழிற்பயிற்சி ப் பாடசாலைகளை நடத்திவருவதோடு அத்தகைய பட்டதாரிகளுக்கு தொழில் பயிற்சி வழங்கி பொருத்தமான பதவிகளில் அமர்த்துவதற்கான ஒரு திட்டத்தையும் ஏற்பாடு செய்திருக்கிறது. வலுக்குறைந்த ஆட்களுக்காக உதவிவரும் என்.ஜி.ஒக்களுக்கு அரசாங்கம் ஒரளவு நிதி உதவியும் வழங்கிவருகிறது. அத்தகைய உதவியில் உடற் கூறுகளில் உள்ள குறைபாடுகளை போக்க உதவும் சாதனங்களைத் துணை ஆதரவாயிக் குறைந்த விலையில் வழங்குவது வலுக்குறைந்தோர் உறபத்தி செய்யும் பொருட்களைக் கொள்வனவு செய்தல் என்பனவும் இடம் பெற்றுள்ளன. அத்தோடு அது வலுக்குறைந்தோர்க்கென என்.ஜி.ஒக்களால் நடத்தப்படும் 74 பாடசாலைகள், பயிற்சிக் கழகங்கள் என்பவற்றைப் பதிவு செய்து ஆக்கபூர்வமான உதவிகளையும் செய்துவருகிறது. வலுக்குறைந்தோராயும் வேலைசெய்யும் தகுதியுள்ளோராகவும் இருக்கும் சுமார் 200,000 பேருக்கு பொருத்தமான வேலை தேடித்தருவதற்கென சமூக சேவைகள் திணைக்களம் அப்பணிக்குப் பொருத்தமான அதிகாரிகளையும் தேர்ந்தெடுத்துள்ளது. இத்தகைய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தும் எதிர்மறையான போக்கு மற்றும் வேறுபாடுகாட்டும் சமூக அமைப்பு காரணமாக வலுக்குறைந்த நிலையிலுள்ள ஆட்கள் கஷ்டங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

**தேசிய, இன, குல சிறுபான்மையினர்**

தேசிய.்.இன.்.குல சிறுபான்மையினர் ஒப்பீட்டு அளவில் சமீபத்திய இந்தியவம்சாவளியினர் எனச் சொல்லப்படும் தேயிலைத்தோட்டத் தமிழர்கள் அல்லது இந்திய தமிழர்கள் என அழைக்கப்படும் ஏறத்தாழ 1 மில்லியன் தமிழர்கள் இங்கு உள்ளனர். இவர்களின் மூதாதையர்கள் 19ம் நூற்றாண்டில் பெருந்தோட்டங்களில் வேலைசெய்வதற்கென இங்கு கொண்டுவரப்பட்டவர்களாவர். கடந்த காலத்தில் இவர்களில் ஏறத்தாழ 300,000 பேர் எந்தவொரு நாட்டிலும் பிரஜா உரிமை பெறுவதற்குத்தகுதி பெறவில்லை அவர்களுக்கு எதிராக பாகுபாடு அதிலும் குறிப்பாக கல்விக்கான அரச நிதி ஒதுக்கீட்டுவிடயத்தில் பாகுபாடு காட்டப்பட்டது. ஒக்டோபர் 2003ல் பாராளுமன்றம் அவர்களில் 300,000க்கும் அதிகமன பேருக்கு குடியுரிமை வழங்கி சட்டம் ஒன்றை நிறைவேற்றியது. ஒகஸ்ட் மாதத்தில் யுஎன்எச்சிஆர் புதிய சட்டம் பற்றி அவர்களுக்கு விழிப்புணர்ச்சி ஊட்டும் இயக்கத்தை ஆரம்பித்தது. ஆண்டு இறுதியில் 200,000 பேரை அது பதிவு செய்தது. உள்நாட்டுத் தமிழரும் மலைநாட்டுத் தமிழரும் நீண்டகாலமாகத் திட்டமிட்ட முறையில் பல்கலைக்கழக கல்வி, அரசாங்க வேலை, மற்றும் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் உள்ள இதர விடயங்கள் ஆகியவற்றில் பாரபட்சமாக நடத்தப்படுவதாக தங்களின நிலைப்பாட்டை வலிறுத்திவருகிறார்கள் வீடமைப்பிலும் அவர்களுக்கெதிராக பாகுபாடு காட்டப்பட்டதாக எச்ஆர்சி கூறுகிறது.

வேடுவர் என அழைக்கப்படும் நாட்டின் பழங்குடி மக்களின் எண்ணிக்கை 1000க்கும் குறைவாகும். தங்களின் சம்பிரதாய ஒதுக்குப்புற வாழ்க்கையையே அவர்களில் சிலர் விரும்புகின்றனர். அவர்கள் அரசியல் அமைப்புச்சட்டத்தினால் பாதுகாக்கப்பட்டுள்ளனர். அரசியலிலோ அல்லது தேசத்தின் பொருளாதார வாழ்விலோ பங்குபற்றுவதற்கு அவர்களுக்குச் சட்டக்கட்டுப்பாடுகள் எதுவுமில்லை. பாதுகாக்கப்பட்டுள்ள காட்டுப்பகுதிகலிருந்து விரட்டியடிக்கப்படுவதாக சில வேடுவர்கள் முறையீடு செய்துள்ளனர்.

**இதர சமூக ரீதியான துஷ்பிரயோகமும பாகுபாடும்**

குற்றவியல் தண்டனைக் கோவை பிரவு 365 a ஆண்களுக்கிடையிலும் பெண்களுக்கிடையிலும் நடைபெறும் தன்னினச் சேர்க்கையை தண்டனைக்குரிய குற்றமாக்கியுள்ளது. ஆனால் அது நடைமுறைப்படுத்தப்படுவதில்லை. தன்னினச்சேர்க்கை இருபாலினச் சேர்க்கை, போன்ற விடயங்களில் அக்கறை கொண்ட என்ஜிஓகள் அரசாங்கத்தில் பதிவு செய்யவில்லை. நடப்பு ஆண்டில் பொலீஸார் கொழும்பிலும் இதர பகுதிகளிலும் தன்னிச்சேர்ககை ஆணகளை துன்புறுத்தி, பணம்பறித்து, அடித்ததாக மனித உரிமைகள அமைப்புகள் கூறின. ஏச் ஐ வி தடுப்பு சேவைகளில் ஈடுபட்டுள்ளவர்கள், மற்றும் எச் ஐ வி- எயிட்ஸ் ஆகியவற்றை பரப்பக்கூடிய ஆபத்தான குழுக்கள் ஆகியோருக்கு எதிரான உத்தியோகபூவ பாகுபாடு இல்லை. ஆனால் சமூகத்தில் ஓரளவு பாகுபாடு காணப்படுகிறது.

## பிரிவு 6 தொழிலாளர் உரிமைகள்

**அ. சங்க அமைப்புரிமை**

தொழிலாளர்கள் யூனியன்களை அமைப்பதற்கு அரசியலமைப்புச்சட்டம் வழங்கும் உரிமையை அரசாங்கம் மதித்துவந்திருக்கிறது. நாடும் ஓர் வலுவான தொழிற்சங்க சம்பிரதாயத்தைக் கொண்டுள்ளது. எந்த ஏழு ஊழியர்களும் சேர்ந்து ஒரு யூனியனை அமைக்கலாம். ஒரு சாசனத்தை அமைப்பது, தலைவர்களைத் தேர்தல், தங்களின் கருத்துக்களை வெளியிடுதல் என்பனவற்றிற்கு அது வகை செய்யினும் நடைமுறையில் அத்தகைய உரிமைகள் நிர்வாகக்காலதாமதங்களுக்கு உட்படுவதோடு உத்தியோகப்பற்றற்ற ரீதியில் அவை ஊக்கக்கேடுகளுக்கும் உள்ளாகின்றன. எனினும் நாடெங்கிலுமுள்ள 7 மில்லியன் பேரைக்கொண்ட தொழிலாளர் அமைப்புகளில் ஏறத்தாழ 20 சதவிகிதமானோரும் மற்றும் 70 சதவிகிதத்திற்கு கூடுதலான பெருந்தோட்டத்துறை தொழிலாளர்களைக் கொண்ட (அதில் மிகப் பெரும்பான்மையோர் மலைநாட்டுத்தமிழர்கள்) அமைப்புகள் யூனியன்மயப்படுத்தப்பட்டிருக்கின்றன. மொத்தத்தில் யூனியன் அங்கத்தவர்களாக 1 மில்லியனுக்கும் கூடுதலானோர் உள்ளனர். தனியார்துறையில் விவசாயத்துறை சாராத ஊழியர்களில் ஏறத்தாழ 15 -20 சதவிகிதமானோர், யூனியன்களில் இணைந்துள்ளனர். பாரிய தனியார் நிறுவனங்களில் அனேகமான தொழிலாளர்களை யூனியன்கள் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன. ஆனால் சிறிய அளவிலான விவசாய மற்றும் சிறிய வியாபார அமைப்புக்களில் வழமையில் தொழிலாளர்கள் யூனியன்களில் இடம்பெறுவதில்லை. அரசாங்கத்துறை ஊழியர்கள் அதிகூடுதலான விகிதங்களில் யூனியன் மயப்படுத்தப்பட்டுள்ளனர்.

அனேகமான பெரிய யூனியன்கள் அரசியல் கட்சிகளோடு இணைந்ததாக அரசியல் நடைமுறையில் குறிப்பிடத்தக்கதான பங்கினை ஏற்றுவருகின்றன. எனினும் அரசாங்கத்துறையில் உள்ள பெரிய யூனியன்கள் அரசியல் ரீதியில் சுயேச்சையானதாகவே உள்ளன. 30க்குக் கூடுதலான தொழிலாளர் யூனியன்கள் அரசியல் சார்புடையவை. எனினும் அத்தகைய சார்பற்ற ஒரு சிறு எண்ணிக்கையிலான யூனியன்களும் இருக்கவே செய்கின்றன. இவற்றில் சுறுசுறுப்பான தலைவர்களைக் கொண்டதாகவும் ஒப்பீட்டளவில் அதிக எண்ணிக்கையிலான உறுப்பினர்களை கொண்டதாகவும் இயங்கிவருகின்றன. 2003 ன் போது வேலை தொழில் வாய்ப்பு அமைச்சு 168 புதிய யூனியன்களைப் பதிவு செய்ததோடு ஏனைய 64ன் பதிவுகளை இரத்துச்செய்தது. இதன்படி 2003 இறுதிவாக்கில் மொத்தம் 1604 யூனியன்கள் செயல்படுவனவாக அமைந்திருந்தன. ஆண்டறிக்கை சமர்ப்பிக்கத்தவறும் எந்தவொரு யூனியனதும் பதிவை இரத்துச் செய்வதற்கு

சட்டம் வேலைவாய்ப்பு தொழில் அமைச்சுக்கு அதிகாரம் வழங்கியுள்ளது. பதிவினை இரத்துச்செய்வதற்கு இது ஒன்றே சட்பூர்வமான அடிப்படையாக அமைந்துள்ளது.

வேறுபாடு காட்டுவதில் குற்றமிழைத்தோராகக் கானப்படும் வேலைகொள்வோர் யூனியன் செயற்பாடுகளுக்காக வெளியேற்றப்பட்ட தொழிலாளர்களை மீண்டும் வேலைக்குச் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்றும் ஆனால் வேறு இடங்களுக்கு விரும்பினால் இடமாற்றம் செய்யலாம். யூனியனுக்கு விரோதமான விதத்தில் வேறுபாடுகள் காட்டப்படுவது தண்டனைக்குரியதொரு குற்றச்செயலாகும். அதற்கான அபராதம் 200 டொலர்கள்(20,000 ரூபா).

**ஆ ஒழுங்கமைத்தல் மற்றும் கூட்டாகப்பேரம் பேசுதலுக்கான உரிமை**

கூட்டாகப்பேரம் பேசுதலுக்கான உரிமைக்கு சட்டம் வகை செய்கிறது. ஆனால் வெகு சில கம்பனிகளே அதனைச் செய்கின்றன. ஆண்டின் இறுதிவாக்கில் இலங்கை வேலைகொள்வோர் சம்மேளனத்தைச்சேர்ந்த (ஈ.எப்.சி) 50 கம்பனிகள் கூட்டு இணக்கங்களைக் கொண்டிருந்தன. அனைத்துக் கூட்டு ஒப்பந்தங்களும் தொழில் திணைக்களத்தில் பதிவு செய்யப்படவேண்டும். அவ்வாறு எத்தனை ஒப்பந்தங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன எனற தரவு கிடைக்கவில்லை.

**ஈ எப் சி உறுப்பினர்களான 435 கம்பனிகளில் பாதிக்கு மேற்பட்டவை யூனியன்களைக் கொண்டவை.**

பொலிஸ், ஆயுதப்படைகள், சிறைச்சாலைச்சேவை மற்றும் அத்தியாவசிய சேவைகளிலுள்ளோரைத்தவிர சகல தொழிலாளர்களுக்கும் வேலை நிறுத்தம் செய்யும் உரிமையுண்டு. தங்களின் உரிமைகளைப்பாதுகாப்பதற்காக தொழிலாளர்கள் சட்டப்பிரகாரம், தொழில் ஆணையாளர் ஒரு தொழில் தீர்ப்புமன்றம் அல்லது உச்ச நீதிமன்றத்திற்கு முறையீடு செய்யலாம். இந்தப் பின்னணி இயக்க ஏற்பாடுகள் திருப்திகரமானவைதான் எனினும் புதிய சீரமைப்புக்கள் மத்தியஸ்த வழக்குகளைத் தீர்த்து வைப்பதற்கு அனுமதிக்கப்படும் கால அவகாசம் மீது மட்டுப்பாடுகளை வைத்துள்ளன. எவ்வாறாயினும் வழக்குகளை தீர்த்து வைப்பதில் தொடர்ந்தும் கணிசமான தேக்கநிலை இருந்துவருகிறது. எந்த ஒரு தொழிற்றுறையையும், ஓர் அத்தியாவசிய சேவையாகப் பிரகடனப்படுத்தும் அதிகாரத்தை ஜனாதிபதி கொண்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

அத்தியாவசிய சேவையல்லாத துறைகளில் வேலைநிறுத்தம் செய்வோருக்கு எதிராக வஞசம் தீர்க்கும் வகையில் நடவடிக்கை எடுப்பதை சட்டம் தடை செய்கிறது. நடைமுறையில் ஊழியர்கள் வேலைநிறுத்தம் செய்தமைக்காக வேலைநீக்கப் செய்யப்பட்டிருக்கின்றனர்.

சட்டத்தின் கீழ் ஈ.பி.ஸற்களிலுள்ள தொழிலாளர்கள் ஏனைய தொழிலாளர்களைப்போன்றே யூனியன்களில் சேர்ந்து கொள்வதற்கான அதே உரிமைகளைக் கொண்டுள்ளனர். யூனியன் அமைப்பாளாகள் அவ்வலயங்களுக்குச் சென்று வருவதில் கடுமையான கட்டுப்பாடுகள் இருப்பது பகுதியளவான ஒரு காரணமாயிருப்பதால் ஈ.பி.ஸற் களில் 10க்கு குறைந்த யூனியன்களே அமைக்கப்பட்டுள்ளன. நாட்டின் எஞ்சிய பகுதிகளில் யூனியன் மயப்படுத்தும் விகிதம் ஏறத்தாழ 20 ஆக இருக்கையில் ஈ.பி.ஸற்களுக்குள் இது 10 சதவிகிதத்திற்கு குறைவாகவேயுள்ளது. 200 தொழிற்சாலைகளில் 8ல் மாத்திரம் முன்னர் தொழிற்சங்கங்கள் அங்கீகரிக்கப்பட்டன வேறு சில தொழிற்சாலைகளில் முகாமைத்துவம் தொழிற்சங்கங்களுடன் பேச்சுவார்தை ஆரம்பித்தது. நடப்பு ஆண்டில் ஈ.பி.ஸற்களில் ஒரேயொரு கூட்டு

ஒப்பந்தமே நடைமுறையில் இருந்தது. ஊதியங்கள், வேலை நிலைமைகள் உட்பட ஈபிஸற் முகாமைத்துவப்படுத்தும் அரசாங்கத்தின் பி.ஓ.ஐ யூனியன் செயற்பாட்டினை ஊக்கங்கெடவைத்துள்ளதாக தொழிற் பிரதிநிதிகள் குற்றஞ்சாத்துகின்றனர். வேலைவாய்ப்பின் குறுங்காலத்தன்மையும் மற்றும் ஈ.பி.ஸற்களில் ஒப்பீட்டளவில் இளந்தொழிலாளர்கள் வேலை செய்வதும் அமைப்புப்பணியினை கஷ்டமாக்கியுள்ளன. பி.ஓ.ஐ யினது வற்புறுத்தலின் கீழ் தொழிற்கமிஷனர் தொழிற்சங்கங்களுடன் கூட்டுப்பேரப் பேச்சுக்களில் ஈடுபடுவதையோ அல்லது அங்கீகரிப்பதையோ மறுக்கும் வேலைகொள்வோர் மீது வழக்குத் தொடர தவறிவிட்டதாக தொழிற் பிரதிநிதிகள் குற்றச்சாத்தினர். சுதந்திர தொழிற்சங்கங்களின் சர்வதேச மகா சம்மேளனத்தின் கூற்றுப்படி நடப்பு ஆண்டில் ஈ.பி.ஸற்களில் தொழிற சங்க உரிகைள சில மறுக்கப்பட்டன. தொழிறசங்கங்கள் அங்கீரிக்கப்படாது விடப்பட்டமை ஒரு பிரச்சினையாகியது.. இதற்காள காணங்களில் ஒன்று பலதரப்பு இருதரப்பு வணிக உடனபடிக்கைகளாகும்.

### இ. பலாத்காரமாக வேலைக்கமர்த்தல் அல்லது அடிமைத்தனமாக வேலைகொள்ளல் மீதான தடை

பலாத்காரமாக வேலைக்கமர்த்தல் அல்லது அடிமைத்தனமாக வேலைகொள்ளல் என்பவற்றை சட்டம் தடைசெய்கிறது. எனினும் அத்தகைய நடைமுறைகள் பின்பற்றப்பட்டிருப்பதை அறிக்கைகள் புலப்படுத்துகின்றன. பலாத்காரமாக வேலைக்கமர்த்தல் அல்லது அடிமைத்தனமாக வேலைகொள்ளல் என்பன தொடர்பில் குறிப்பாக பிள்ளைகள் விடயத்தில் சட்டம் அதனைத்தடை செய்யவில்லை. ஆனாலும் அரசாங்க அதிகாரிகள் அது சகல வயதினர்க்கும் பொருந்தும் என விளக்கந்தருகின்றனர்.(பிரிவு 6 ஈ யைப்பார்க்க) சில கிராமப்புறச்சிறார்கள் நகர்ப்புறவீடுகளில் கடனுக்கீடான முறையில் வீட்டு வேலைக்காரர்களாக உள்ளனர் என நம்பகரமான செய்திகள் தெரிவித்தன, இத்தகைய சிறுவர்கள் சிலர் துஷ்பிரயோகம் செய்யப்படுவதாக அனேக செய்திகள் தெரிவித்தன.

### ஈ. சிறுவர்களை வேலையிலீடுபடுத்துவதான நடைமுறைகள் மற்றும் அவர்களை வேலைக்கமர்த்துவதற்கான ஆகக்குறைந்த வயது பற்றிய நிலை

வேலையில் ஈடுபடுத்துவதற்கான ஆகக்குறைந்த வயது 14, எனினும் தங்களின் பெற்றோர்களால் அல்லது பராமரிப்பாளர்களால் மட்டுப்படுத்தப்பட்ட குடும்ப விவசாயப்பணிகளிலோ அல்லது தொழில்நுட்ப பயிற்சியிலோ இளம் பிள்ளைகள் ஈடுபடுத்தப்படுவதை சட்டம் அனுமதிக்கிறது. பெண்கள், இளம் பிராயத்தினரை வேலைக்கமர்த்தும் சட்டத்திற்கு ( ஈ.டபிள்யு.வை.சி) சமீபத்தில் கொண்டுவரப்பட்ட திருத்தம் 14 வயதிற்குட்பட்ட சிறார்களை வேறு விதத்திலான அனைத்துக் குடும்பப்பணியமர்த்துகைகளையும் தடைசெய்கிறது. 5 வயதுக்கும் 14 வயதுக்குமிடைப்பட்ட பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்புவதைக் கட்டாயப்படுத்தும் பாடசாலைகள் சட்டம் 1998 முதல் நடைமுறைப்பட்டுவருகிறது, ஆனாலும் அது இன்னமும் நிறைவேற்றப்பட்டே வருகிறது. புள்ளிவிபர தொகைமதிப்புத் திணைக்களத்தினால் 1998, 1999ல் நடத்தப்பட்ட பிள்ளைச் செயற்பாட்டு மதிப்பீடொன்று 5 க்கும் 14க்கும் இடைப்பட்ட வயதுடைய அனேகமாக 11,000 சிறார்கள் முழுநேர அடிப்படையில் வேலைசெய்து வருவதையும் மற்றும் 15,000 சிறார்கள் பொருளாதார வீட்டுப் பராமரிப்பு ஆகிய இரு துறைகளிலம் ஈடுபட்டிருப்பதையும் புலப்படுத்தியது. 450,000 சிறார்கள் அவர்களின் குடும்பத்தினரால் ஈடுபடுத்திவருவதையும் அந்த மதிப்பீடு வெளிக்காட்டியது.

ஆயுளுக்கோ அல்லது அங்கங்களுக்கோ பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய எந்தவொரு அரச தொழில் முயற்சிகளிலும் 18 வயதுக்குறைந்தோர் ஈடுபடுத்தப்படக்கூடாது. சிறுவர்கள் சில சமயங்களில்

பெருந்தோட்டத்துறையிலும் அத்தகைய அல்லாத விவசாயத்துறையிலும் அறுவடைக்காலத்தின்போது ஈடுபடுத்தப்பட்டுவரினும் ஈ.பி.ஸற்களில் மற்றும் ஆடைஉற்பத்தித் தொழிற்றுறை அல்லது வேறு ஏதாவது ஏற்றுமதித்துறைகளிலோ பிள்ளைகள் வேலைக்கமர்த்தப்படுவதாகத் தகவலில்லை. பல்லாயிரக்கணக்கான பிள்ளைகள் வீட்டு வேலைகளில் ஈடுபடுத்தப்பட்டிருப்பதாக நம்பப்படினும் இந்த நிலைமை தொடர்பில்

செயற்பாடுகள் ஒழுங்குபடுத்தப்பட்டிருக்கவுமில்லை அல்லது பதியப்பட்டிருக்கவுமில்லை. பல வீட்டு வேலை செய்யும் பிள்ளைகள் உடல், பாலியல், உணர்சி ரீதியான உபாதைகளுக்கு உட்படுத்தப்படுவதாக செய்திகள் வந்துள்ளன. குடும்பப்பண்ணைகள், கைப்பணிப்பொருள் உற்பத்தி, சிறுவர்த்தக நிறுவனங்கள், சிற்றுண்டிச்சாலைகள், திருத்தவேலைகளில் ஈடுபடும் கடைகள் போன்ற குடும்ப ஆதிக்கத்திலுள்ள துறையிலும் நியாயமாக பிள்ளைகள் வேலையில் ஈடுபடுத்தப்படுகின்றனர். 2003 சர்வதேச தொழில் அமைப்பு சிறுவர் தொழில் ஒழிப்பு சரவதேச நிகழ்ச்சித் திட்டம் 5 மாவட்டங்களில் மேற்கொண்ட ஒரு ஆய்வில் (18 வயதுக்குட்பட்ட) சிறுவர் வீட்டுப் பணியாளர் குடும்பத்துக்கு 2 சத விகிதமாக இருந்தது.

பிள்ளைகளின் பாதுகாப்பு மீது செயற்பாடுகளை ஒன்றிணைப்பது மற்றும் கண்காணிப்பது போன்ற பணிக்களின் மையத்தலமாக தேசிய சிறார் பாதுகாப்பு அதிகாரசபை விளங்குகிறது. தொழில் திணைக்களம் சிறுவர் நன்நடத்தை பாதுகாப்பு சேவைகள் திணைக்களம் மற்றும் பொலிஸ் திணைக்களம் என்பனவே சிறார் தொழிற்சட்டங்களின் நிறைவேற்றத்திற்குப்பொறுப்பாக உள்ளன. 14 வயதுக்குட்பட்ட பிள்ளைகளை வேலைக்கமர்த்தும் போக்கு கடும் விதிமுறைகள் காரணமாகவும் பொதுமக்கள் மத்தியில் ஏற்பட்ட விழிப்புணர்வு காரணமாகவும் குறைந்து வருவதாக தொழில் இலாகாவும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையும் அறிவித்துள்ளன. 2003ல் சிறார்களின் தொழில் ஈடுபாடுதொடர்பில் தனக்கு 203 முறைப்பாடுகள் கிடைத்ததாக தொழிற்திணைக்களம் அறிவித்தது, இவற்றில் 65 வழக்குகள் சாட்சியக் குறைபாடு அல்லது தவறான முறைப்பாடு காரணமாக விலக்கிக்கொள்ளப்பட்டன. இலாகா 2003ல் 44 முறைப்புாடுகள் மீது வழக்கு தொடர்ந்தது. நடப்பு ஆண்டில் 64 முறைப்பாடுகள் இலாகாவிடம் செய்யப்பட்டன. அவற்றில் 9 முறைப்பாடுகள் விலக்கப்பட 19 மீது வழக்கு தொடரப்பட்டது. வயது குறைந்த சிறுவர்களை வேலைக்கமர்த்துவதற்கான தண்டனைகள் ஏறத்தாழ 10 டொலர் (1000 ரூபா) அபராதமாகவிதிக்கப்பட அத்தோடு அல்லது 6 மாதச்சிறைத்தண்டனையுமாக முன்னர் இருந்தது. தற்போது 100டொலர்களாக(10,000ரூபா) அத்தோடு அல்லது 12 மாதச்சிறைத்தண்டனையாக அதிகரிக்கப்பட்டன. கட்டாயத்தின் பேரில் அல்லது பிணைமுறியுடன் கூடியதாய் எந்த வயதினரையும் வேலைக்கமர்த்துவதை சட்டம் தடை செய்யினும் சில கிராமத்துப்பிள்ளைகள் கடன் முறிகளின் பேரில் வேலைக்கமர்த்தப்பட்டிருந்ததாக தகவல்கள் தெரிவிக்கப்பட்டிருந்தன. (பிரிவுகள் 5, 6 இயைப் பார்க்க)

எல்ரிரிஈ 13 வயதுடைய சிறார்களைக் கூட போர்முனையில் ஈடுபடுத்தி வந்திருக்கிறது.

நடப்பு ஆண்டில் யுனிசெப் ஆதரவுடன் முன்னாள் பிள்ளைப் போர்வீரரை விடுவித்து சமூகத்தில் ஒன்றிணைக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இத்திட்டத்தின கீழ் யுனிசெவ் எல்ரிரிஈ ஆல் விடுவிக்கப்படும் சிறுவரை கிளிநொச்சியில் ஒரு இடைநிலை இல்லத்தில் வைத்து பராமரிப்பதை ஆதரிக்க இணங்கியது.
சர்வதேச தொழில் அமைப்பு மாநாடு 182 விதித்தபடி அரசாங்கம் சிறுவர் தொழிலில் மிக மோசமானதென 50 வகைத் தொழில்களை இனம் கண்டது. இவற்றை தடை செய்வதற்கான சட்டம் இன்னும் இயற்றப்படவில்லை.

**உ. வேலை ஏற்பு நிபந்தனைகள்**

தேசிய மட்டத்தில் குறைந்த ஊதிய நிர்ணயம் தொடர்பில் சர்வதேச ரீதியில் எந்தவிதமான முறைமையும் இல்லாதிருப்பினும் கைத்தொழில் உட்பட சகலதுறைகளுக்குமென மிகக்குறைந்த ஊதிய அளவு மற்றும் வேலை நிலைமைகளை நிர்ணயிப்பதற்கென தொழில் திணைக்களம் ஏறத்தாழ 38 ஊதிய சபைகளை அமைத்தது. இந்த ஆகக்குறைந்த ஊதியங்கள் ஒரு தொழிலாளிக்கும் மற்றும் குடும்பத்துக்கும் ஒரு கண்ணியமான வாழ்க்கைத்தரத்தை வழங்கவில்லை 2003 பிற்பகுதியில் தொழில் அமைச்சு அனைத்து ஊதிய சபைகளதும் குறைந்தபட்ச ஊதியங்களை குறைந்தது 15 சத விகிதத்தால் அதிகரிக்க ஆரம்பித்தது. ஆயினும் ஆண்டு இறுதியில் ஆடைத்தொழில் மற்றும் ஹோட்டல் துறை ஆகியவற்றுக்கு இந்த செயறடபாடு விஸ்தரிக்கப்படவில்லை.

பெரும்பாலான முழு நேர ஊழியர் வாரத்துக்கு 45 மணித்தியாலங்களுக்கு மேல் வேலை செய்வதைத் தடை செய்கிறது. (ஐந்தரை நாள்). புதிய விதிகள் ஆகக்கூடிய மேலதிக நேர வேலையை வார்த்துக்கு 15 மணித்தியாலங்கள் ஆக்கியுள்ளன. புதிய சட்டம் ஊழியரின் சம்மதத்துடனான மேலதிக நேர வேலை என்ற ஏற்பாட்டைக் கொண்டிருக்கவில்லை என தொழில் சங்க ஏற்பாட்டளர் கவலைப்பட்டனர்

தொழிலாளர்கள் ஆண்டு விடுமுறையாக 14 நாட்களையும் 14 முதல் 21 நாட்கள் வரையிலான மருத்துவ விடுமுறைகளையும் ஆண்டுக்கு ஏறத்தாழ 20 உள்ஊர் விடுமுறைகளையும் பெற்று வருகின்றனர். பிரசவ விடுமுறை நிரந்தர, பருவகால, பகுதிநேரப் பெண் தொழிலாளர்களுக்கும் கிடைக்கிறது. அனேக சட்டங்கள் கைத்தொழில்துறைகளில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் பாதுகாப்பு, ஆரோக்கியம் என்பவற்றை உத்தரவாதப்படுத்துகின்றன. ஆனால் இதனை ஏற்று அமுல் நடத்துவதற்கு தொழில் அமைச்சின் ஒரு சிறு எண்ணிக்கையிலான பரிசோதகர் தொகை போதாதுள்ளது. ஆரோக்கிய மற்றும் பாதுகாப்பு தொடர்பில் தற்போதுள்ள விதிமுறைகள் சர்வதேச தரங்களை எட்டுவதாக இல்லை. அபாயகரமான நிலைமைகளிலிருந்து தங்களை விடுவித்துக்கொள்ள தொழிலாளர்களுக்குச் சட்டப்படியான உரிமை உள்ளது. ஆனால் அனேக தொழிலாளர்களுக்கு இது தெரியாது அல்லது பராமுகமாயுள்ளனர். அத்தகைய அபாயகரமான வேலை நிலைமைகளிலிருந்து வெளியேறிட்டால் தாங்கள் வேலையை இழக்க நேரிடும் எனவும் அவர்கள் அச்சங்கொண்டுள்ளனர்.

இத்தளத்தை நிர்வகிப்பது: பொது விவகார அலுவலகம், அமெரிக்க இராஜாங்க அமைச்சு